Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | ஆவணி 29 | (14 - 09 - 1992) | திங்கட்கிழமை | ஓசை 209

## லங்கா சீமெந்து நிறுவனம் மூடப்படும் நிலை

லங்கா சீமெந்து நிறுவனம் பெரு நட்டம் அடைந்துள்ளதாகவும் அதன் காரணமாக இந்த நிறுவனம் தொடர்ந்து இயங்கக் கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன 1991 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஒருவருட காலப்பகுதிக்கான கணக்கு அறிக்கையின் பிரகாரம் இந் நிறுவனம் ரூபா எழுநூற்று தொன்னூற்று ஒரு கோடியே பதினைந்து இலட்சத்து பதினெண்ணாயிரத்து ஐந்நூறு ரூபா நட்டமடைந்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது. இந் நிறுவனத்தின் மொத்தக் கடன் அதன் மொத்தசொத்து இருப்பிலும் பார்க்க 1 874.300 258 ரூபா

(4 ஆம் பக்கம் பார்க்க)

(அராலி குண்டுவெடிப்பு சம்பவம்)

# கண்ணிவெடி வைத்த போராளிகளுக்கு தலைவர் பிரபாகரன் பாராட்டு, பரிசளிப்பு

## "துணிவும் விடாமுயற்சியும் இருந்தால் எதையும் சாதித்துவிடலாம்"

[யாழ்ப்பாணம்]


"எமது ஆயுதப் போராட்ட வரலாற்றில் நாம் மகத்தான சாதனைகளைப் புரிந்திருக்கிறோம். மாபெரும் வெற்றிகளை ஈட்டியிருக்கிறோம். உலகமே வியக்கும் வகையில் வீர காவியங்களைப் படைத்திருக்கிறோம். எமது போராளிகளின் அபாரமான துணிவும், விடா முயற்சியும், தளராத உறுதியுமே இந்த வெற்றிகளுக்குக் காரணமாக இருந்திருக்கின்றன. எதற்கும் துணிந்தால், விடாது முயற்சிகளை எடுத்தால், உறுதியோடு இயங்கினால் எந்த சாதனையையும் சாதித்து விடலாம். எமது இயக்கத்தின் இராணுவ வெற்றிகள் இந்த உண்மையையே எடுத்தியம்புகின்றன."

இவ்வாறு தலைவர் பிரபாகரன் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட பரிசளிப்பு விழாவில் பேசும்பொழுது எடுத்துரைத்தார். சென்ற மாதம் 8 ஆம் திகதி தீவகப் பகுதியில் அராலிச் சந்திக்கு அண்மையில், விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலை வெற்றிகரமாக நடத்திய போராளிகளுக்கு தலைவர் பரிசில்களை வழங்கினார்.

இராணுவத்தின் ஆக்கிரமிப்பிற்குள் இருக்கும் தீவகப் பகுதிக்குள் ஊடுருவி நிலக் கண்ணியை வைத்த விசேட இராணுவ வேவுப் பிரிவைச் சேர்ந்த நான்கு போராளிகளுக்கும், அவர்களது பாதுகாப்புக் குழுவாகச் சென்ற ஐவருக்கும் சகதி வாய்ந்ததும், நுட்பம் மிகுந்ததுமான இந்தக் கண்ணிவெடியை கண்டுபிடித்து அறிமுகம் செய்தவருக்கும், தாக்குதலுக்கு உரிய இடத்தைத் தெரிவுசெய்த தீவகக் கோட்டச் சிறப்புப் பொறுப்பாளருக்கும் இந்தப் பரிசுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. அத்துடன் 05-07-1992 இல் புல்லாவெளியில் சீன டாங்கி ஒன்றை ஆர் பி ஜி தாக்குதலால் முற்றாக நாசமாக்கிய போராளிக்கும் தலைவரால் பரிசு வழங்கப்பட்டது.

விடுதலைப்புலிகளின் படைத்துறைக் கட்டமைப்பில் வேவுப் பிரிவு வகிக்கும் முக்கிய பங்கை தலைவர் பிரபாகரன் எடுத்து


[4 ஆம் பக்கம் பார்க்க]



### பரிசுபெற்ற போராளிகள்

துணிகரமாகவும், திறமையாகவும் வேவுபார்த்து கண்ணிவெடியை வைத்த போராளிகள்: கார்வண்ணன் (பீற்றர்) வினோதன், செம்மனத்தான் (குணாளன்), வெற்றிச்செழியன் (ஜெயா).

இவர்களுக்குப் பாதுகாப்



# தமிழ் குழுக்களை பெருமளவில்

எமது ஆயுதப் போராட்ட வரலாற்றில் நாம் மகத்தான சாதனைகளைப் புரிந்திருக்கிறோம். மாபெரும் வெற்றிகளை ஈட்டியிருக்கிறோம். உலகமே வியக்கும் வகையில் வீர காவியங்களைப் படைத்திருக்கிறோம். எமது போராளிகளின் அபாரமான துணிவும், விடா முயற்சியும், தளராத உறுதியுமே இந்த வெற்றிகளுக்குக் காரணமாக இருந்திருக்கின்றன. எதற்கும் துணிந்தால், விடாது முயற்சிகளை எடுத்தால், உறுதியோடு இயங்கினால் எந்த சாதனையையும் சாதித்து விடலாம். எமது இயக்கத்தின் இராணுவ வெற்றிகள் இந்த உண்மையையே எடுத்தியம்புகின்றன.''

இவ்வாறு தலைவர் பிரபாகரன் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட பரிசளிப்பு விழாவில் பேசும்பொழுது எடுத்துரைத்தார். சென்ற மாதம் 8 ஆம் திகதி தீவகப் பகுதியில் அராலிச் சந்திக்கு அண்மையில், விடுதலைப புலிகளால் மேற்கொள்ளப்பட்ட கண்ணி வெடித் தாக்குதலை வெற்றிகரமாக நடத்திய போராளிகளுக்கு தலைவர் பரிசில்களை வழங்கினார்.

இராணுவத்தின் ஆக்கிரமிப்பிற்குள் இருக்கும் தீவகப் பகுதிக்குள் ஊடுருவி நிலக் கண்ணியை வைத்த விசேட இராணுவ வேவுப் பிரிவைச் சேர்ந்த நான்கு போராளிகளுக்கும், அவர்களது பாதுகாப்புக் குழுவாகச் சென்ற ஐவருக்கும் சக்தி வாய்ந்ததும், நுட்பம் மிகுந்ததுமான இந்தக் கண்ணி வெடியை கண்டு பிடித்து அறிமுகம் செய்தவருக்கும், தாக்குதலுக்கு உரிய இடத்தைத் தெரிவுசெய்த தீவகக் கோட்டச் சிறப்புப் பொறுப்பாளருக்கும் இந்தப் பரிசுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. அத்துடன் 05-07-1992 இல் புல்லாவெளியில் சீன டாங்கி ஒன்றை ஆர் பி ஜி தாக்குதலால் முற்றாக நாசமாக்கிய போராளிக்கும் தலைவரால் பரிசு வழங்கப்பட்டது.

விடுதலைப்புலிகளின் படைத்துறைக் கட்டமைப்பில் வேவுப் பிரிவு வகிக்கும் முக்கிய பங்கை தலைவர் பிரபாகரன் எடுத்து

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பரிசுபெற்ற போராளிகள்

துணிகரமாகவும், திறமையாகவும் வேவு பார்த்து கண்ணி வெடியை வைத்த போராளிகள்: கார்வண்ணன் (பீற்றர்) வினோதன், செம்மனத்தான் (குணாளன்), வெற்றிச்செழியன் ஜெயா).

இவர்களுக்குப் பாதுகாப்பாகச் சென்ற போராளிகள்: அமுதன் (கபில்), கலையறிஞா (ஜேசு), அழகன்(விசு), செங்கதிர், செங்கண்ணன் (பூவரசன்).

இந்தக் கண்ணிவெடியைக் கண்டுபிடித்து அறிமுகம் செய்தவர்: பிரதீப்

தாக்குதலுக்குரிய இடத்தைத் தெரிவுசெய்து கொடுத்த தீவகக் கோட்டச் சிறப்புப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் குழுக்களை பெருமளவில் ராணுவத்தில் சேர்க்க முடிவு

## ஆட்பற்றாக்குறையை போக்க அரசாங்கத்தின் புதிய யுக்தி

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்திற்கு தற்பொழுது ஏற்பட்டுள்ள பற்றாக் குறையைப் போக்க சிங்கள இளைஞர்கள் பின்னடிப்பதைத் தொடர்ந்து கொழும்பிலுள்ள தமிழ்க் குழுவினரை பெருமளவில இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளவும் வடக்கு, கிழக்குப் போரில் அவர்களை பெருமளவில் பயன்படுத்தவும் அரசாங்கம் தீர்மானம் மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இது சம்மந்தமாக கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களுடன் இராணுவ அதிகாரிகள் தொடர்ச்சியாகப் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் இதில் புளொட் இயக்கமும் தீவிர அக்கறை காட்டுவதாகவும் அறியவருகிறது ஒருதறு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## சிங்கள இளைஞர்களுக்கு கட்டாய இராணுவ பயிற்சி

சிறிலங்கா இராணுவத்தில் சேருவதற்கு சிங்கள இளைஞர்கள் தயங்குவதால் கட்டாய இராணுவப் பயிற்சி அளிக்கும் முடிவுக்கு சிறிலங்கா அரசு வரலாம் என பி. பி. ஸி நேற்று தெரிவித்தது.

வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படும்போது போதியளவு விண்ணப்பங்கள்கிடைக்காமையால் சிறிலங்கா அரசிற்கு பெரும் பிரச்சினை உருவாகியுள்ளது. இந்நிலையில் இராணுவத்திலிருந்துதப்பிஓடியவர்களைதேடி கண்டு பிடித்து இணைத்துக் கொள்வது அல்லது கட்டாய இராணுவப்பயிற்சிக்கு சிங்கள இளைஞர்களை ஈடுபடுத்துவது என்பதே சிறிலங்கா அரசின் முன்னுள்ள தீர்வுகள் என பி.பி ஸி தெரிவித்தது.

## மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல்

(வடமாராட்சி)

வெற்றிலை கேணியிலிருந்து தொண்டமனாறு பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருந்த கடற்படையினர் நேற்று (13 ஆம் திகதி) காலை மீனவர்கள் மீது பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டதில் ஒரு மீனவர் தாக்குதலுக்கு உள்ளானார். அவர்களது வள்ளமும் சேதமடைந்தது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது: இன்பருட்டிப் பகுதியைச் சேர்ந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூவர் கணபதிப்பிள்ளை(வயது60) கனிங்கேஸ்வரன் (வயது 22) க. லிங்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இலங்கை செஞ்சிலுவைசங்க யாழ். கிளை தேர்தல் முடிவு

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணம் கிளை உத்தியோகத்தர்தெரிவு நேற்றுக் காலை யாழ் பரியோவான் கல்லூரியில இடம் பெற்றது.

பரபரப்பான சூழ்நிலையில் இடம்பெற்ற இந்த உத்தியோகத்தர் தெரிவுக் கூட்டத்தில் பலத்த போட்டியின் மத்தியில் பின்வரும் உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் பதவிக்கு தம்பிராசா சிங்கராசா தெரிவு செய்யப்பட்டார். இப்பதவிக்கு த சிங்கராசாவுக்கு எதிராகச் சூசைப்பிள்ளை திருச்செல்வம் போட்டியிட்டார். மொத்தம் பதிவு செய்யப்பட்ட 394 வாக்குகளில் த சிங்கராசா 308 வாக்குகள் அதிகப்படியாகப் பெற்றுத்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# இனப்பிரச்சினைவிவகாரத்தில் நிகழ்பவை எல்லாம் குழப்பம்

## இந்து பத்திரிகை விமரிசனம்


[சென்னை]

இனப்பிரச்சினையில் நிகழ்பவை எல்லாம் குழப்பகரமானவையாகவே இருக்கின்றன. ஏதோ ஒரு திசையில் விவகாரங்கள் விரைவில் நகரும் என்றே சிறிலங்கா இராணுவ வட்டாரங்களும், அரசியல் வட்டாரங்களும் எதிர் பார்ப்பதாக பிரபல இந்தியன் பத்திரிகையான இந்து தெரிவித்துள்ளது.

மேலும், பலவித பேச்சுக்கள் அடிபடுகின்றன. ஆனால் ஸ்தலத்தில் நடவடிக்கை எதையும் காணமுடியவில்லை எனவும் 'இந்து' தெரிவிக்கின்றது. இலங்கையின் வடக்கு-கிழக்கு போர் முனைகளில் கடந்த சில நாட்களாக இனம் புரியாத சஞ்சலமற்ற ஒருஅமைதி நிலவுகின்றது. ஆங்காங்கே நடைபெறும் சில தாக்குதல்களைத்தவிர பாரிய ராணுவ நடவடிக்கை எதுவுமேஇல்லை எனவும் தெரிவித்துள்ளது

உடனடியாக எந்தவொரு தாக்குதலையும் மேற்கொள்ளப் போவதாக இராணுவ வட்டாரங்கள் ஒத்துக்கொள்ளவில்லை எனினும் கொழும்பி

[4 ஆம் பக்கம் பார்க்க]





தலைவர் பிரபாகரன், அராலியில் கண்ணி வெடியை வைத்த போராளிகளில் ஒருவரான கார்வண்ணனுக்கு (பீற்றர்) பரிசில்கள் வழங்குவதை மேலேயுள்ள படத்திலும், இக்கண்ணிவெடியைக்கண்டு பிடித்து அறிமுகப்படுத்திய போராளி பிரதீப்பிற்கு பரிசில்கள் வழங்குவதை கீழே உள்ள படத்திலும் காணலாம்.

# தமிழீழத்தை அங்கீகரிக்குமாறு பாட்டாளிமக்கள் கட்சி தீர்மானம்

(சென்னை)

இந்திய அரசு தமிழீழத்தை அங்கீகரிக்க வேண்டும் என பட்டாளிமக்கள் கட்சியின் மாநாடு தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

சென்னையில் நடைபெற்ற இக்கட்சியின் மூன்றாவது நாள் மாநாட்டில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

இந்தியாவில் தமிழர்கள் உட்பட எல்லா இனமக்களுக்கும் தன்னாட்சி உரிமை வழங்கும் புதிய அரசியல் அமைப்புச் சட்டம் அமைக்கப்பட வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

பாட்டாளி மக்கள்கட்சியின் இறுதிநாள் கூட்டத்தில் முன்னாள் இந்தியபிரதமர்வி.பி.சிங் ராமஅபதீஸ் சிங்,ராம்விலாஸ் பாஸ்வான், பிரகோஸ் அம்பேத்கர், திராவிடர் கழக தலைவர் கி. வீரமணி, பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனரும் தலைவருமான டாக்டர் ராம்தாஸ் ஆகியோர் பேசினார்கள்.

## மாநாட்டுப் பேரணியில் தலைவர்பிரபாவின்படங்கள்

(சென்னை)

பாட்டாளி மக்கள் கட்சியினால் சென்னையில் நடாத்தப்பட்ட தமிழர் வாழ்வுரிமை மாநாட்டுப் பேரணியில தமிழினத் தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரன் அவர்களின் உருவப்படங்கள் பல எடுத்துச் செல்லப்பட்டன.

அத்துடன் அங்கு நடைபெற்ற மாநாட்டில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக பலர் சொற்பொழிவாற்றினர்.

## வரி விளம்பரம்


**"நீமியா உரம்"**

நெற் பயிருக்குச் சிறந்த அடிக்கட்டு உரமான நீமியா உரம் அனைத்துப் பயிர்களுக்கும் உகந்தது. பூச்சி புழுக்களிலிருந்து பாதுகாப்புத் தருவது நீமியா உரம். கூடிய விளைச்சலைத் தருவது நீமியா உரம். கிலோ ரூபா 15/-. 20 கிலோ ரூபா 260/-. அண்ணா கோப்பி கடைகளிலும் கிடைக்கிறது. மில்க்வைற், யாழ்ப்பாணம். (சி/5037)

**your watches, Clocks & Radios**

Your Watches Clocks & Radios to repair? Contact us immediately we repair with full guarantee all Watch Batteries available Dilka Watch works 284, Stanely Road, Jaffna.
(Opposite old Vihare) (சி-4970)

**ஒரேயொரு நூல்**

அராலியூர் சுந்தரம்பிள்ளை எழுதிய முதலாம்பிள்ளை 30/- இன்று விற்பனையாகும் ஒரேயொரு வானொலிநாடகநூல், இலக்கியப் பரிசு பெற்றது. 20 வீத கழிவு உண்டு. 30, கடையிற்சுவாமி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (3068)


# மாகாணசபைத் தேர்தலுக்கு ஐ. தே. க. தயாராகிறது

[கொழும்பு]

இரண்டாவது மாகாண சபைத் தேர்தலைச் சந்திப்பதற்கு ஐக்கிய தேசியக்கட்சி தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. தேர்தல் அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்தில் நடைபெறும் என்று ஐ. தே. கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

1993 ஏப்ரல் மாதத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதென்று ஐ. தே.கட்சி இறுதியான முடிவை எடுத்த பிறகு தேர்தல் களத்தில் நிறுத்துவதற்கு வேட்பாளரைத் தேடும் பணியில் ஐ. தே. கட்சி இறங்கியுள்ளது.

1988 ஜூன் மாதம் நடைபெற்ற முதல் மாகாண சபைத் தேர்தலின் போது தோல்வியடைந்த ஐ. தே. கட்சி வேட்பாளர்களுக்குப் பட்டியலில் இம் முறை இடம் தரப்படுமா அல்லது புதிய முகங்களுக்கு இடம் கிடைக்குமா என்பது தொடர்பாக கட்சி உயர்பீடம் இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை எனத் தெரிகிறது.

1987 இந்தியா - சிறிலங்கா உடன்படிக்கையின் ஓர் அம்சமான மாகாண சபைகளுக்கான தேர்தல் இம்முறை கட்சிகள் குழுக்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கிடையிலுமான பலப் பரீட்சையாகவே அமையும் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை அமுலாக்கப்பட்ட பிறகு இடைத் தேர்தல் இல்லாமல் செயல்பட்டது. இதனால் கட்சிகளும், கட்சிகளுக்குள் இருக்கும் குழுக்களும் மற்றவர்களும் இடைத்தேர்தலில் போட்டியிட்டுத் தமது பலத்தை நிரூபிப்பதற்குச் சந்தர்ப்பம் அற்றுப்போயிற்று.

வடக்கு - கிழக்கில் மாகாண சபைத் தேர்தல் நடத்துவது பற்றி இப்போது நினைத்துப் பார்க்கவும் முடியாது என்று கட்சியின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

இது வரை ஐ தே. கட்சி இருபத்தைந்து மாவட்ட மாநாடுகளை நடத்தியுள்ளது. ஜனாதிபதி ஆர் பிரேமதாசாவின் கண்காணிப்பிலேயே இம் மாநாடுகள் நடத்தப்பட்டன. இது தேர்தலுக்கு முகம் கொடுப்பதற்கு முன்னான நடவடிக்கை ஒன்று என்றுகூறப்படுகிறது. மாநாடுகளில் கட்சியின் அதிகாரங்களைக் கிராம மட்டத்தில் பன்முகப் படுத்துவது பற்றி வலியுறுத்தப் பட்டன.

ஐ. தே. கட்சியில் நாடு பூராகவும் 40 லட்சம் உறுப்பினர்கள் உள்ளனர். ஐ தே. கட்சி ஒரு மக்கள் கட்சி என்றும், அது நெகிழ் தன்மை கொண்டது என்றும் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா வலியுறுத்தி வருகிறார்.

### குடும்ப அட்டைகள் மீளாய்வு

பருத்தித்துறை கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில்குடும்பஅட்டைகள்மீளாய்வுசெய்யப்பட்டுவருகின்றன.

குடும்ப அட்டைகள் மீளாய்வின் போது குடும்ப அட்டை அடையாள அட்டைகள், பிறப்புச் சான்றிதழ்களும் கேட்கப்பட்டுள்ளன (82)

### அலங்கார உற்சவம்

யாழ். வண்ணையம்பதி நாவலடி கற்பக விநாயகர் ஆலய அலங்கார உற்சவம் பத்தாவது நாளான இன்று (14-9-92) விநாயகருக்கு விசேட அபிசேகம், பூசை என்பன நடைபெற உள்ளது.

நண்பகல் மகேசுர பூசையும், பிற்பகல் மேளக்கசேரியும் நடைபெறுமென ஆலய பரிபாலன சபையினர் அறியத் தருகின்றனர். (21)

## தட்சணா மருதமடுவில் புதிய முகாம் அமைப்பு

(வவுனியா)

மடுப்பகுதியில் தட்சணாமருதமடு என்ற இடத்தில் புதிய அகதி முகாம் ஒன்று அமைக்கும் வேலைகள் முடிவடைந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

மடுத்திருப்பதி அகதிமுகாமில் உள்ள அகதி மக்களின் தொகையைக் குறைக்கும் நோக்குடனேயே இந்தப் புதிய முகாம் அமைக்கப்பட்டு வருகிறது.

பல்லாயிரக்கணக்கான அகதி மக்கள் தஞ்சமடைந்திருக்கும் மடுத்திருப்பதி அகதி முகாமில் சன நெருக்கடியினால் தண்ணீர்ப் பற்றாக் குறை சுகாதார சீர்குலைவு ஏற்பட்டுள்ளது-

இந்நிலையை அகற்றும் நோக்குடன் மடுத்திருப்பதி பகுதியிலிருந்து சுமார்இரண்டு மைல் தூரத்தில் உள்ள மேற்படி தட்சணா மருதமடு பகுதியில் புதிய அகதி முகாமிற்காக ஏராளமான குடிசைகள் அமைக்கப்படுகின்றன.

யூ என்.எச் சீ ஆர் ஸ்தாபனத்தாரால்தண்ணீர்ப்பற்றாக் குறையைத் தீர்ப்பதறகாக புதிய கிணறுகள் தோண்டப்படுகின்றன.

இடம்பெயர்ந்து செல்லும் புதிய அகதி மக்களை தங்க வைப்பதற்கும் இந்த முகாம் அமைக்கப்பட்டு வருகிறது என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்தன. (தி)

## வடபகுதித் தபால்கள் இராணுவம் கடும் சோதனை

வவுனியாவிற்கு வெளியே இருந்து வடபகுதிநோக்கிஅனுப்பி வைக்கப்படும் தபால்கள் இராணுவத்தால்கடும் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

வெளிநாடுகளிலிருந்து வடபகுதிக்கு அனுப்பி வைக்கப்படும் ஒலிப்பதிவு நாடாக்களும், வீடியோ ஒளிப்பதிவு நாடாக்களும் இராணுவத்தின் கடும் சோதனைக்குப் பின்னரே வடபகுதிக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

வவுனியா பிரதம தபாலகத்தில் இராணுவ புலனாய்வுப் பிரிவினரால் இது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வெளிநாட்டு, உள்நாட்டு தபால்கள் எவையாயினும் இராணுவ புலனாய்வுப் பிரிவினரால் சோதனை இடப்படுகின்றன. தபால் உறையினுள் உள்ள புகைப்படங்களும் தீவிரமாகச் சோதனை செய்யப்படுகின்றன.

சோதனையின் போது சந்தேகத்திற்குரிய கடிதங்கள் மற்றும் புகைப்படங்கள் போன்றவை கைப்பற்றப்படுகின்றன.

வீடியோஒளிப்பதிவு நாடாக் ஒட்டப்பட்டு உரியவரின் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டத்தின் இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வரும் கடிதங்களே பிரிக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

(தி)

### ஆங்கில தினப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

மருதனாமடம் கோட்டக் கல்வி பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளுககிடையிலான ஆங்கிலதின போட்டிகள் கோட்ட மட்டத்தில் இம்மாதம் 18-ம் 19-ம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

18ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆங்கில எழுத்து சொல்வதெழுதல், பார்த்து எழுதல், படம் வரைதல் போன்ற எழுத்து சம்பந்தமான போட்டிகளும்,

19-ம் திகதி சனிக்கிழமை பேச்சு, வாசிப்பு, உச்சரிப்பு பாட்டு போன்ற வாய்மூலமான போட்டிகளும் இடம்

### கத்தி முனையில் நகை பறிப்பு

கிழக்கு மாகாண வர்த்தகர் ஒருவரின் மனைவியின் தாலிக்கொடி கத்தி முனையில் கொள்ளை அடிக்கப்பட்டிருக்கிறது.

கொழும்பில் உள்ள இவரது இல்லத்தில் மனைவியும், அவரது தாயாரும்இருந்த சமயம் கடந்த புதன்கிழமை இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தாலிக்கொடியின் பெறுமதி சுமார் 70 ஆயிரம் ரூபா என்று தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் தொடர்பாக பொலிஸ் கோஷ்டி ஒன்று தீவிர விசாரணைகளை நடத்தி வருகிறது.

### மகா கும்பாபிஷேகம்

(கொழும்புத்துறை)

சுன்னாகம் இராமநாதன் கல்லூரி அருள்மிகு ஸ்ரீ சிவன் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் 14-9-92 இன்று திங்கட்கிழமை காலை ஆறு மணிக்கு நடைபெற உள்ளது.

காலை 6 35 மணி முதல் 7.29 மணிக்குள் சிவபெருமானுக்கும், ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்


உ
சிவமயம்



## ஆசார்யாபிஷேக அழைப்பிதழ்

சுவஸ்தி ஸ்ரீ நிகழும் ஆங்கீரச வருடம்
ஆவணித்திங்கள் 31 ஆம் நாள் (16 - 09 - 92) புதன்கிழமை
8 15 — 9.15 வரையுள்ள பரணி நட்சத்திரமும்
கிருஷ்ண பட்ச சதுர்த்தி திதியும் கன்னிலக்கினமும்கூடிய
சுபமுகூர்த்தத்தில்,

வைதீக கிரியா விற்பன்னரும் சகலாகம சங்கிரகர்
சிவகாமப் பிரவீண கிரியாகலாபமணி
**பிரம்மஸ்ரீ. நா. சிவசாமிக்குருக்களின்**
கனிஷ்ட புத்திரன்
**பிரம்மஸ்ரீ.**
**தர்மராஜசர்மாவிற்கு**
(கட்டுடை அரசடி விநாயகர் தேவஸ்தான அர்ச்சகர்)

கட்டுடை அரசடிவிநாயகர்ஆலயத்தில் சிவாச்சார்யாபிஷேகம் நிகழ்த்த விநாயகர் திருவருள் கைகூடியிருப்பதால் அத்தருணம்அனைவரும் குடும்ப சமேதராய்வருகைதந்து இவ் வைபவத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தீட்சாகுரு : கிரியாரத்தினம் சிவாகமபூஷணம்
பிரம்மஸ்ரீ. கதிர் செல்லப்பாக்குருக்கள் (மாதகல்)
சர்வசாதகாச்சாரியார் : நிர்மலேஸ்வரசர்மா (நவாலி)

சுபம்

அரசடிவிநாயகர் ஆலயம் இங்ஙனம்
கட்டுடை. திரு. தர்மராஜசர்மாகுடும்பத்தினர்
(3202) திரு. பாலசுப்பிரமணியசர்மாதம்பதிகள்


## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பு
15. 06. 1944
அநியாய அழிப்பு
19. 08. 1989
திதி:
14. 09. 1992

### திரு. இராஜசிங்கம் கிளி

என்றும் எங்கள் உள்ளத்தில் பாச சுடர் விடும் பாச விளக்கே! உமது ஆத்ம சாந்திக்காக செல்வச் சந்நிதி கந்தனை பிரார்த்திக்கின்றோம்.

## நினைவு கூருகின்றோம்...

### 1992 - 09 - 14

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் திருக்கோணமலை-மூதூர். கூனித்தீவுப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

லோகிதன் (கணபதிப்பிள்ளை யோகராசா - தம்பலகமம், திருக்கோணமலை)

1989ஆம் ஆண்டு தமிழகத்தில் சிகிச்சை பெற்று வரும் போது வீரச்சாவெய்திய -

கப்டன் ரங்கன் (இ. ரங்கநாதன்-காரைநகர், யாழ்.)

முல்லைத்தீவு - விசுவமடுப்பகுதியில், இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

-ம்லெப். கிளியன் (கிருஸ்ணபிள்ளை நடனகுமார்- கிளிநொச்சி)

1990ஆம் ஆண்டு தலைமன்னார் சிறிலங்கா கடற்படை முகாம்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

2-ம்லெப். ரகுபதி/ராஜன் (மரியதாஸ் ஜுட் அமல்ராஜ் - மலைக்குளம், உயிலங்குளம், மன்னார்)

2-ம்லெப். நவாஸ் சீலன் (அகஸ்ரின் அந்தோனி

இல்லத்தில் மனைவியும், அவரது தாயாரும்இருந்த சமயம் கடந்த புதன்கிழமை இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தாலிக்கொடியின் பெறுமதி சுமார் 70 ஆயிரம் ரூபா என்று தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் தொடர்பாக பொலிஸ் கோஷ்டி ஒன்று தீவிர விசாரணைகளை நடத்தி வருகிறது.

## மகா கும்பாபிஷேகம்

(கொழும்புத்துறை)

சுன்னாகம் இராமநாதன் கல்லூரி அருள்மிகு ஸ்ரீ சிவன் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் 14-9-92 இன்று திங்கட்கிழமை காலை ஆறு மணிக்கு நடைபெற உள்ளது.

காலை 6 35 மணி முதல் 7.29 மணிக்குள் சிவபெருமானுக்கும், ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் இடம்பெறும்.

இவ்விழாவைப் பிரம்ம ஸ்ரீ அ. நா. சோமஸ்கந்த சிவாச்சாரியார் பிரதிஸ்டா பிரதம குருவாக முன்னின்று நடாத்தி வைப்பார்.

இவ்வைபவத்தில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், திரு இரா. சுந்தரலிங்கம் யாழ் கல்விப் பணிப்பாளர், ஸ்ரீமதி ம சிற்றம்பலம் (அதிபர் இராமநாதன் கல்லூரி) உட்படப் பல பெரியார்கள் ஆசியுரை வழங்கவுள்ளனர். (24)

## இறுதி ஆட்டமும் பரிசளிப்பு விழாவும்

(குருநகர்)

யாழ். மடம் வீதி திருவள்ளுவர் சனசமூக நிலையம் அமரர் சிற்றம்பலம் பஞ்சலிங்கம் நினைவாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டமும் பரிசளிப்பு வைபவமும் இன்று (14- 9- 92) திங்கட்கிழமை மாலை 3-00 மணிக்கு யாழ். பரியோவான் கல்லூரி மைதானத்தில் நிலையத் தலைவர் திரு. மா. ஞானசேகரம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு சு. திவகலாலவும், சிறப்பு விருந்தினராக தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதியும் கலந்து கொள்வர்.

இன்றைய இறுதி ஆட்டத்தில் பங்கெடுக்கும் அணிகளின் விபரம் வருமாறு:-

★ நாவாந்துறை சென்: நீக்கிலஸ் வி.க. அணி எதிர் பாஷையூர் சென்: அன்ரனீஸ் வி.க. அணி,

★ குருநகர் பாடும் மீன் வி.க. அணி எதிர் நாவாந்துறை சென்: மேரிஸ் வி.க. அணி. (21)

பகுதிக்கு அனுப்பி வைக்கப்படும் ஒலிப்பதிவு நாடாக்களும், வீடியோ ஒளிப்பதிவு நாடாக்களும் இராணுவத்தின் கடும் சோதனைக்குப் பின்னரே வடபகுதிக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

வவுனியா பிரதம தபாலகத்தில் இராணுவ புலனாய்வுப் பிரிவினரால் இது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வெளிநாட்டு, உள்நாட்டு தபால்கள் எவையாயினும் இராணுவ புலனாய்வுப் பிரிவினரால் சோதனை இடப்படுகின்றன. தபால் உறையினுள் உள்ள புகைப்படங்களும் தீவிரமாகச் சோதனை செய்யப்படுகின்றன.

சோதனையின் போது சந்தேகத்திற்குரிய கடிதங்கள் மற்றும் புகைப்படங்கள் போன்றவை கைப்பற்றப்படுகின்றன.

வீடியோஒளிப்பதிவு நாடாக்கள் மட்டும் இராணுவ முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டுஅங்கு வைத்துசோதனை செய்யப்பட்ட பின்னரே மீள அனுப்பி வைக்கப்படுகின்றது.

சந்தேகம் அற்றவை எனக் கருதப்படும் தபால்கள் மீளுக்கு வரும் கடிதங்களே பிரிக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன

(தி)

## ஆங்கில தினப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

மருதனாமடம் கோட்டக் கல்வி பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளுககிடையிலான ஆங்கிலதின போட்டிகள் கோட்ட மட்டத்தில் இம்மாதம் 18-ம் 19-ம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

18ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆங்கில எழுத்து சொல்வதெழுதல், பார்த்து எழுதல், படம் வரைதல் போன்ற எழுத்து சம்பந்தமான போட்டிகளும்,

19-ம் திகதி சனிக்கிழமை பேச்சு, வாசிப்பு, உச்சரிப்பு பாட்டு போன்ற வாய்மூலமான போட்டிகளும் இடம்பெறும்.

மருதனாமடம் கோட்டத்துக்குட்பட்ட கொத்தணி மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்கள் இப்போட்டிகளில் கலந்து கொள்வர். (42)

# யாழ். செயலகத்திற்கு ஒரு லட்.ரூபா நஷ்டமாம்

(யாழ்ப்பாணம்)

அரசின் நிவாரண வெட்டைக்கண்டித்து கடந்த புதன்கிழமை நடாத்தப்பட்ட கண்டனப் பேரணியின் இறுதியில் பாதிக்கப்பட்ட மக்கள் அரசிற்கெதிரான ஆவேச உணர்ச்சி அலையின் காரணமாக யாழ். செயலகம் மீது தாக்குதல் நடத்தியதினால் யாழ் செயலகத்தில் ஒருலட்சம் பெறுமதியான பொருள்கள் சேதமாக்கப்பட்டுள்ளன என யாழ். செயலக வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது

மேற்படி தாக்குதலினால் கிட்டத்தட்ட 75 யன்னற் கண்ணாடிகளும், யாழ் செயலகப் பெயர்ப்பலகை, முன்பக்க மதிலின் மேற்பகுதி போன்றவை சேதமாக்கப்பட்டன என்பது ஏற்கனவே நீங்கள் அறிந்ததே (பா)

# ஆசிகுளத்தில் அகதிமுகாம் வேலைகள் ஆரம்பம்

(வவுனியா)

ஆசிகுளம் பகுதியில் ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் முகாம் அமைக்கும் வேலைகளை ஆரம்பித்து உள்ளது. ஆசிகுளம் சிதம்பரபுரம் பகுதியில் இருபது ஏக்கர் நிலப்பரப்பில் அகதி முகாம் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

**ஆஸ்பத்திரிகளை நாடுவது**

# நோயைக் குணப்படுத்தவே சடலமாக திரும்ப அல்ல

- ரேணுகா

(கொழும்பு)

''நோயாளிகள் தமது நோயைக் குணப்படுத்துவதற்காகவே ஆஸ்பத்திரிகளை நாடுகிறார்கள் சடலமாக திரும்பிச்செல்வதற்காக அல்ல'' எனவே சுகாதார சேவை ஊழியர்கள் தமது கடமைகளை உணர்ந்து அவற்றைச்சரிவர செய்யவேண்டும் அல்லதுதமது பதவிகளை ராஜினாமாச் செய்ய வேண்டும். இவ்வாறு சுகாதார மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா கேரத் தெரிவித்துள்ளார்.

ஹபராதுவை உணவட்டுண என்ற இடத்தில் மருத்துவ நிலையத்தை திறந்துவைக்கும் வைபவத்தில் கலந்து கொண்டு பேசும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பு

15. 06. 1944

அநியாய அழிப்பு

19. 08. 1989

திதி:

14. 09. 1992

### தரு. இராஜசிங்கம் கிளி

என்றும் எங்கள் உள்ளத்தில் பாச சுடர் விடும் பாச விளக்கே! உமது ஆத்ம சாந்திக்காக செல்வச் சந்நிதி கந்தனை பிரார்த்திக்கின்றோம்.

'வளர்மதி வாசா'
கன்பொல்லை வீதி,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி

அன்பு மனைவி
அருமை மகள், சகோதரர்
மைத்துனர், உறவினர்.

(3167)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரஜனனம்

20-09-1974

வீரச்சாவு

14-09-1991

### லெப். குலன் (குகன்)

(சபாபதி பார்த்தீபன்)

தியாக வேள்வியிலே தீய்ந்தனையோ பார்த்தீபனே
நியாய மெப்போது நிம்மதியாய் மூச்சுவிடும்
சிரித்தவுன் முகம் காணச் சிந்தை துடிக்குதடா
சரித்திரத்து நாயகனே சத்தியமே வெல்லுமடா!

வீரச்சாவடைந்த எங்கள் செல்வன் பார்த்தீபனின் இல்லத்தில் இன்று (14-09-92) நடைபெறும் மதிய போசனத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள், சக போராளிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, சகோதரர், உற்றர்,
உறவினர், நண்பர்கள், மருமக்கள்

கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். (3166)

## 1992 - 09 - 14

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் திருக்கோணமலை-மூதூர். கூனித்தீவுப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**லோகிதன்** (கணபதிப்பிள்ளை யோகராசா - தம்பலகமம், திருக்கோணமலை)

1989ஆம் ஆண்டு தமிழகத்தில் சிகிச்சை பெற்றுவரும் போது வீரச்சாவெய்திய -

**கப்டன் ரங்கன்** (இ. ரங்கநாதன்-காரைநகர், யாழ்.)

முல்லைத்தீவு - விசுவமடுப்பகுதியில், இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**-ம்லெப். கிளியன்** (கிருஸ்ணபிள்ளை நடனகுமார்- கிளிநொச்சி)

1990ஆம் ஆண்டு தலைமன்னார் சிறிலங்கா கடற்படை முகாம்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

**2-ம்லெப். ரகுபதி/ராஜன்** (மரியதாஸ் ஜுட் அமல்ராஜ் - மலைக்குளம், உயிலங்குளம், மன்னார்)

**2-ம்லெப். நவாஸ் சீலன்** (அகஸ்ரின் அந்தோனி முத்து சகாயசீலன் - முருங்கன்பிட்டி, மன்னார்)

**ரவி/அன்ரனி** (யேசுதாசன் மைக்கல் - சாவற்காடு, மன்னார்)

யாழ். கோட்டைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**சிறிராம்** (சபாரத்தின தேசிகர் நந்தகுமார் - சாம்பல் தீவு - திருக்கோணமலை)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட செங்கலடி 2-ஐச் சேர்ந்த 2-தமிழ் இளைஞர்கள் - அலுவலகத்திலிருந்து முஸ்லிம் கும்பலொன்றினால் கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வாழைச்சேனை, கண்ணகிபுரத்தைச் சேர்ந்த தபால் ஊழியரான தமிழ்ப் பொதுமகன் - வாழைச்சேனையில் கடத்திச்செல்லப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட புதுக்குடியிருப்பைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

மன்னார் - சிலாவத்துறைப் பகுதியில் வயலில் வேலை செய்து கொண்டிருக்கையில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட 10 தமிழ் விவசாயிகள்.

சாவகச்சேரியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ் விவசாயி.

1991ஆம் ஆண்டு மணலாற்றில், சிறிலங்கா இராணுவததினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

**ஜூனைதா** (வசந்தி தங்கராசா - மட்டக்களப்பு)

**உமா** (சித்திராதேவி ஆறுமுகம் - பூவரசங்குளம், வவுனியா)

**லெப். அலீபா** (மாமுடி கிருஸ்ணகுமார் - ஆண்டாங்குளம, அடம்பன், மன்னார்)

**செனித்/சோதிராசா** (இராசையா குமார்-வசந்தபுரம், கர்சிலைமடு, ஒட்டிசுட்டான், முல்லைத்தீவு)

**ரவி/தயாளன்** (சின்னையா குமார் - கணேசபுரம், கிளிநொச்சி)

**சுதா** (ரஜனி பாலேந்திரன் - புன்னாலைக்கட்டுவன், தெற்கு, யாழ்.)

**யூட்டி** (ஜெயதேவி இராசரட்ணம் - உடுத்துறை வடக்கு, தாளையடி, யாழ்)

**நியாஸ்** (இராமநாதன் ஜெயானந்தராசா - காரைநகர், யாழ்)

மாவட்டபுரத்தில், சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய -

**லெப். குலன்** (வ. சபாபதி பார்த்தீபன் - கோண்டாவில் வடக்கு, யாழ்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி/5042)

### சிந்தனைக்கு

ஆட்சி முறையில், வன்முறைச் சித்தாந்தத்தைப் பயன்படுத்துவது போல் மடமை உலகில் வேறு கிடையாது

- வால்ட் விட்மன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 14- 09- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## சிங்களத் தலைமைக்கு ஓர் எச்சரிக்கை

"வடக்கு, கிழக்குப் போரில் புலிகளின் கை ஓங்குவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகரித்துள்ளது விரைவில் அரசியல் தீர்வொன்று காணாவிட்டால் வடக்கு - கிழக்கை சிறிலங்கா அரசாங்கம் இழக்க வேண்டி வரலாம் என பிரபல சிங்களப் பத்திரிகையாளர் 'ஐவன்' பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்

இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமாகப் போவதில்லை. பிரச்சினையை வளர்த்துச் செல்லவே அது உதவும் என சிறிலங்கா அரசாங்கத்திற்கு முன்னரே பலரால் எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தது. ஆனால் சிங்கள அரசாங்கம் இராணுவத் தீர்வு என்ற நிலைப்பாட்டில் இருந்து விலகிச் செல்லவில்லை. நாட்டின் வளங்கள் யாவற்றையும் முழுமையாகப் பயன்படுத்தியேனும் இராணுவ வெற்றியை ஈட்ட வேண்டும் என்ற ரீதியிலேயே செயற்பட்டது. அத்தோடு இராணுவத் தீர்வின் மூலம், இனப்பிரச்சினைக்கு தீர்வு காணலாம் எனச் சிங்கள மக்களில் பெரும்பான்மையோரை நம்பவைக்கவும் செய்தது.

ஆனால், இன்று நிலைமையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. சிறிலங்கா அரசாங்கம் கூறுவது போல் 'மீட்கப்பட்ட பிரதேசங்கள்' அல்லது 'பூரண கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள்' எனப் பிரதேசங்கள் உண்டா என்ற கேள்வி எழுந்துள்ளது. அதாவது சிறிலங்கா இராணுவத் தரப்பு எதிர்பாராததும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்டதும் புலிகள் நெருங்கமுடியாது என கருதப்பட்ட இடங்களில் கூடத் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன.

ஊர்காவற்றுறையில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலும், மண்டைதீவில் கைப்பற்றப்பட்ட கடற்படைப் படகும் இதற்கு சிறப்பான உதாரணங்களாகும். அதிலும் ஊர்காவற்றுறையில் லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் விஜயவிமலரெட்ணா உட்பட ஆறு சிரேஷ்ட அதிகாரிகள் உட்பட பத்துப்பேர் கொல்லப் பட்டமை யுத்தத்தின் போக்கிலும் பரிணாமத்திலும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. இத்

# "ஒரு பயங்கரம் விரைவாகப் பரவுகிறது"

அம்ஸ்ரடாமிலிருந்து வந்துள்ள ஒரு செய்தி குழப்பத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. எச் ஐ. வி. வைரஸ்கள் எனப்படும் எயிட்ஸ் நோய்க் கிருமிகள் லத்தீன் அமெரிக்க நாடுகளிலும், தென் ஆசிய தென் கிழக்கு ஆசியப் பகுதிகளிலும் வாழும் சமூகரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பின்தள்ளப்பட்ட மக்களில் இருக்கும் மக்களில் பெரும்பான்மையோரை, விசேடமாக "இருமுறையில் சுரண்டப்படும்" பெண்களை காவு கொள்வதற்கும் கட்டியம் கூறுவதாக உள்ளன. முழு மக்கள் கூட்டத்தின் அடுத்துவரும் தலைமுறைகள் எச். ஐ. வி. வைரஸ் காவிகளாகவோ, அல்லது அனாதைகளாகவோ அல்லது இரண்டாகவுமோ இருப்பதற்கு வாய்ப்புகள் அதிகரித்துள்ளன. மேலும் கூறுவதனால் எச். ஐ. வி வைரஸ்கள் இல்லாத நிலையிலும் கூட எயிட்ஸ் போன்றதான நோய்கள் பரவமுடியும் என்று கண்டு பிடிக்கப்பட்டிருப்பது ஒரு கெட்ட முன்னெச்சரிக்கையாகும்.

உலகெங்கும் வாழும் அல்லது இருந்து கொண்டிருக்கும், அல்லது இருப்பதற்காக வாழும் நாற்பது இலட்சம் மக்களுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புடைய 11,000 பேர் வரையில் டச்சுத் தலைநகரமான அம்ஸ்ரடாமில் ஜூலை மாதத்தின் மூன்றாம் வாரத்தில் கூடினர். அப்போது மருத்துவ விவகாரங்களை மட்டுமன்றி மக்களைப் பிடித்தாட்டும் பயங்கரப் பிசாசான எயிட்ஸ் நோய் பற்றிய பல்வேறுவிடயங்களையும் எடுத்து ஆராய்ந்தனர். எயிட்ஸ் என்பது இப்போதும் ஆய்வு கூடங்களிலும், கருத்தரங்க மண்டபங்களிலும் விவாதிக்கப்படும் ஒரு பிரச்சினையாக இல்லை. பதிலாக அது ஆரம்ப சுகாதார வசதிகளையோ அல்லது அடிப்படை உணவுத் தேவை, தங்குமிடம் குடிநீர் போன்றவற்றையே பெற முடியாத நிலையில் இருக்கும் பல இலட்சக்கணக்கான மக்களின் உயிர்களோடு சம்பந்தப் பட்ட பிரச்சினையாகி விட்டது. இத்தகைய மக்களில் பெரும்பாலோர் வளர்ச்சி அடையாத அல்லது வளர்முக நாடுகளில் தான் இருக்கிறார்கள். இந்நோய்கள் தொடர்ந்து பரவும் தன்மை அந்த மக்களை மிரள வைப்பதோடு, நவீன மருத்துவ வசதிகள் இவர்களுக்கு

மாகவும் இருக்கும்மக்களோடு தொடர்புடையது" என்று ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தின் எயிட்ஸ் பிரிவைச்சேர்ந்தவரும், கருத்தரங்கத் தலைவருமான டாக்டர் ஜோனாதன் மான் குறிப்பிடுகிறார். சமத்துவமின்மையும்,ஒடுக்கு முறைகளும் எயிட்ஸ் பரவுவதற்கு தூண்டுவதாக அவருடைய கணிப்புகளில் மேலும்கூறுகின்றார்.பாலியல் அடிப்படையிலும், தேசங்களுக்கு இடையிலும் நிலவும் சமத்துவமின்மை பற்றியே அவர் குறிப்பிடுகின்றார்.

இங்குதான் எயிட்ஸ் பற்றிய எட்டாவது உலகமாநாடு ஒரு தரமாற்றத்தை எட்டியுள்ளது ஏழு ஆண்டுகளுக்குமுன்பு அமெரிக்காவிலும், மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் பரவும் விசித்திர நோய் பற்றிய டாக்டர்களினதும் ஆய்வாளர்களினதும் கவலையாகவே இது இருந்தது. இந்த வருடத்திய மாநாட்டில் டாக்டர்கள், ஆய்வாளர்கள், சமூகத் தொண்டர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், செய்தித் தொடர்பாளர்கள், நலன்விரும்பிகள் என்பவர்களோடு எயிட்ஸ் நோயாளிகள் சிலரும் கலந்து கொண்டனர்.

எயிட்ஸ் நோய்க்கான மருந்தின் விலையை அதிகப்படுத்தியதாக குற்றம் சாட்டப்படும் அமெரிக்க மருந்துக் கம்பெனி ஒன்று, மாநாட்டு அரங்கத்தில் செய்முறை விளக்கமொன்றைக் காட்ட அனுமதிக்கப்பட்டது மற்றுமொரு மாற்றமாகும்.விவாத அரங்குகளின் மூலமும், வேறு வழிகளின் மூலமும் கிளப்பப்படும் விழிப்படையத் தூண்டும் உண்மைகள் பற்றி குழப்பங்களுக்கு அப்பால் புரிந்து கொள்வதற்கு அது வழி வகுத்தது.

எண்பது சதவிகிதமான எயிட்ஸ் நோயாளர்கள் வளர்முக நாடுகளில் இருக்கின்றனர் என்பதுவே அதில் முதலாவது உண்மையாகும்.பத்து வருடங்களுக்கு முன்பு அமெரிக்காவிலும், மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் வாழும் தன்னினச் சேர்க்கையாளர்கள், மற்றும் ஆண்களானபோதைப் பொருள் பாவனையாளர்களிடம் காணப்பட்ட இந்நோய் தற்போது உலகெங்கும் குறிப்பாக ஆசியாவிற்கு கடத்தப் பட்டுள்ளது. ஒரு தசாப்த காலத்திற்கு முன்பு ஆபிரிக்காவின் சகாராப் பகுதியில் பரவிய நோய்களை விட வேகமாக தெற்கு மற்றும் தென்னாசிய நாடுகளில் இந்நோய்

யில் ஆசியாவில் சிலரிடம் மட்டுமே காணப்பட்ட (பதிவு செய்யப்பட்ட வைத்திய அறிக்கைகளின்படி)இந்நோய், இன்று ஒரு லட்சத்திற்கு மேற்பட்டவர்களிடம் காணப் படுவதாக உலக சுகாதார தாபனம் கூறுகிறது. அதிலும் பெரும்பாலானோர் இந்தியாவிலும், தாய்லாந்திலும்தான் இருக்கிறார்கள். இந்நோயின் டரவும் வேகத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால் தொண்ணூறுகளின் இறுதியில் பெரும்பாலானஆசியர்கள் இந் நோயின் தாக்கத்திற்கு உட்படுவார்கள் என்று டாக்டர் மேர்சன் எச்சரிக்கை செய்கிறார். (ஆபிரிக்காவில் எயிட்ஸ் வைரஸ்களின் பாதிப்புக்குள்ளான6 .5 லட்சம் பேர் இருக்கின்றனர் என்பதும், மேற்கு ஐரோப்பாவில் 5 லட்சம் பேர் இருக்கின்றனர் என்பதும் கவனிக்கத்தக்கது)

**அண்மையில் ஒல்லாந்து நாட்டின் தலைநகரமான அம்ஸ்ரடாமில் எயிட்ஸ் நோய்பற்றிய எட்டாவது சர்வதேச மாநாடு நடாத்தப் பட்டது. உலகளாவிய ரீதியில் பரவும் எயிட்ஸ் என்னும் பயங்கர நோய் பற்றியும் அதன் சமூகக் காரணிகள் பற்றியும் இங்கு விரிவாக ஆராயப்பட்டுள்ளது. இம் மாநாடு பற்றி புரன்ட்லைன் சஞ்சிகை வெளியிட்ட கட்டுரையின் ஒரு பகுதி.**

ஆசிய அபிவிருத்தி வங்கி மேற்கொண்ட ஆய்வொன்றிலிருந்து இரண்டாயிரம் ஆண்டில் ஆசியாப் பகுதியில் 40 இலட்சம் பேர் எயிட்ஸ் நோயின் பாதிப்புக்கு இலக்காகியிருக்கக் கூடும் என்றும் 10 இலட்சம் மூத்த எயிட்ஸ் நோயாளிகள் இருக்கக் கூடும் என்றும் தெரிய வந்துள்ளது அத்துடன் சனத்தொகை வளர்ச்சி வீதமும் நோய்ப் பாதிப்புக்கு உள்ளான பெண்

யவர்களிடமே எயிட்ஸ் பரவுவது தீவிரம் பெறுவதற்கு அவர்களின் கல்வித்தரம் அதைத்தடுப்பதற்கு போதுமானதாக இல்லாதிருப்பதும் ஒரு காரணம் என்று தெரிய வருகிறது வேலை வாய்ப்பு குறைவு காரணமாக ஏழைகளில் பெரும்பாலார் வியாபார ரீதியாக பாலியல் நடத்தைகளில் ஈடுபடுவதாகவும், போதைப் பொருட் பாவனையாளர்களில் பெரும்பாலானோர் குறைந்தவருமானமுடையபிரிவுகளிலிருந்துகுறைந்தளவுகல்வியுடன் வருவதாகவும்,கூறப்படுகிறது.

ஒருமுறை இந்நோய் தாக்கியதாக உணரப்பட்டாலும் கூட அதிலிருந்து விடுபடக் கூடியவர்களாக அதற்கான முயற்சியில் ஈடுபடக் கூடியவர்களாக இவர்கள் இல்லாதிருப்பது கவனிக்கப்பட வேண்டும். இந்நோயின் பாதிப்பினால் அதிகரித்து வரும் நோயாளர்கள் வேலையைக் கைவிட்டு, நோய்க்கான சிகிச்சையைப் பெறமுற்பட்டால் அதுகுடும்ப வாழ்விலும், பொதுச்சுகாதாரத்திலும், பொருளாதாரத்திலும், பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று ஐக்கியநாடுகள் அபிவிருத்திப் பிரிவு அதிகாரி ஒருவர் கூறுகிறார்.

ஆசியாவில் எயிட்ஸ் பரவுவதற்கு, சனத்தொகை பெருக்கம், வறுமை, நோய் பற்றிய அலட்சியம், பாலியல் விவகாரங்கள், அளவுக்கதிகமான போதைப் பொருள் பாதிப்பு, தேசிய எல்லைகளைக் கடந்து தொழிலாளர் பிரிவு பெருமளவில் இடம்பெர்தல், அதிகரித்து வரும் வியாபார ரீதியான போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறை என்பவை காரணமாகின்றன.

எயிட்ஸ் பரவுவதற்கு இவை காரணமாகிறது என்றால், பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கைப் போராட்டம் (வறுமைக்கும், நோய்க்கும் எதிராக) சிகிச்சைக்கான செலவினங்களைத் தாங்க முடியாமல் போகும் நிலையில், செல்வந்தர்களுக்கும்- ஏழைகளுக்குமான இடைவெளியை உலகரங்கில் வெளிச்சம் போட்டுக் காட்டுவதாக இருக்கின்றது. அறிக்கைகளிலிருந்து எயிட்ஸ் நோயாளி ஒருவருக்கு சிகிச்சை அளிப்பதற்கு அமெரிக்காவிலேயே வருடாந்தம் 38,000 டாலர்கள் தேவைப்படுகிறது. இந்தப் பெரிய தொகை என்பது இந்தியாவில் ஒரு சாதாரண

சைக்காகவும்,1·4கோடிடாலர்கள் நோய்த் தடுப்பு நடவடிக்கைக்காகவும் 1. 7 கோடி டாலர்கள் ஆய்வு நடவடிக்கைக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தகைய தொகைகள் மூன்றாம் உலக நாடுகளைப் பொறுத்த மட்டில் முழுச் சுகாதார வரவு செலவுத் திட்டத்திற்கும், மேலானது என்பதோடு, மற்ற எல்லாச் சுகாதார முன்னுரிமைகளையும் கைவிட்டாலும் எட்டப்பட முடியாதது என்பது தெளிவு. உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால் 1986-ம் ஆண்டில் எயிட்ஸ் தடுப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்காக இந்தியா ஒதுக்கிய பணம், ஏனைய சுகாதாரத் திட்டங்களைக் கைவிட்டதால் பெறப்பட்டதேயாகும். (1991-92க்கான சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சின் வருடாந்த அறிக்கை ) 1991 - 92 க்கான புள்ளி விபரங்களிலிருந்து எயிட்ஸ் நோய் தடுப்பிற்காக 6 சதவிகிதப் பணத்தை மட்டுமே வளர்முகநாடுகள் ஒதுக்குகின்றன என்பதும், எண்பது சதவிகித நோயாளர்கள் இப்பகுதியிலேயே இருக்கிறார்கள் என்பதும் தெரியவருகிறது.

எனவேதான் ஏற்கனவே சிறிய அளவில் சாதிக்கப்பட்ட சுகாதார சாதனைகளிலும் இது பாதிப்பை ஏற்படுத்துகிறது, மகப்பேறு, சிசு மற்றும் குழந்தை மரண விகிதங்கள் குறைவடைந்தமைக்கு ஆதாரமான சுகாதார நடவடிக்கைகள் கைவிடப்படுகின்றமை பின்நோக்கிய விளைவுகளை ஏற்படுத்தும். தொழிலாளர் சக்தியின் குறைவு என்பது இன்னுமொரு உறுத்தும் உண்மையாகும். ஏனெனில், நோயின் பாதிப்புக்கு இலக்காவோர் பெரும்பாலும் 20-40 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் ஆவர் என்பது ஐ. நா. அபிவிருத்திப் பிரிவின் கணிப்பு. சுகாதார நிகழ்ச்சித் திட்டங்களிலும் நகர்ப்புறங்களுக்கே முன்னுரிமை அளிக்கப் படுகின்ற போதும் கிராமங்களே இதனால் மோசமாகப் பாதிக்கப்படுபவையாகும்.

இதன் விளைவுகள் இத்துடன் மட்டும் நிற்கப் போவதில்லை. இவற்றின் விளைவுகளை மட்டிட்டு விட முடியாது. ஆனால் நோய் பற்றிய பயம், ஆழ்ந்த துக்கம், அநியாயம் மற்றும் ஒடுக்குமுறை, உலகளாவிய அளவில் பரவும் தன்மையால் ஏற்படும் நீண்டகால பின்விளைவு என்பவை

இராணுவத் தீர்வின் மூலம், இனப்பிரச்சினைக்கு தீர்வு காணலாம் எனச் சிங்கள மக்களில் பெரும்பான்மையோரை நம்பவைக்கவும் செய்தது.

ஆனால், இன்று நிலைமையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. சிறிலங்கா அரசாங்கம் கூறுவது போல் 'மீட்கப்பட்ட பிரதேசங்கள்' அல்லது 'பூரண கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள்' எனப் பிரதேசங்கள் உண்டா என்ற கேள்வி எழுந்துள்ளது. அதாவது சிறிலங்கா இராணுவத் தரப்பு எதிர்பாராததும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்டதும் புலிகள் நெருங்கமுடியாது என கருதப்பட்ட இடங்களில் கூடத் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன.

ஊர்காவற்றுறையில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலும், மண்டைதீவில் கைப்பற்றப்பட்ட கடற்படைப் படகும் இதற்கு சிறப்பான உதாரணங்களாகும். அதிலும் ஊர்காவற்றுறையில் லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் விஜயவிமலரெட்ணா உட்பட ஆறு சிரேஷ்ட அதிகாரிகள் உட்பட பத்துப்பேர் கொல்லப்பட்டமை யுத்தத்தின் போக்கிலும் பரிணாமத்திலும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. இத்தாக்குதல்கள் இராணுவ வட்டாரங்களுக்குச் சவால் விடுவதாகவும் சிங்கள மக்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்துவதுமாக இருந்தது.

இவை வடக்கு கிழக்குப் போரில் சிங்கள மக்கள் கொண்டிருந்த மாயையை முற்றாக அகற்றின. இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமென்பது முழுமையாக 'விடுவிக்கப்பட்ட பிரதேசம்' என்றோ அன்றி, 'பாதுகாப்பான' பிரதேசம் என்றோ கொள்ளமுடியாது என்பதை சிங்கள மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள உதவின. அத்தோடு, யுத்தம் சகலருடைய வீட்டின் வாசலுக்கும் கொண்டு வரப்பட்டு விட்டதையும், இதில் இருந்து எவரும் தப்பிஓடிவிட முடியாது என்பதையும் அவர்கள் உணர்ந்து கொள்ளத் தொடங்கினர்.

இந்நிலையில், சிங்கள மக்கள் யுத்தத்திற்கு முடிவு கொண்டுவரப்பட வேண்டும் என்பதை உணர்ந்து கொண்டதோடு. இப்போரில் அரசாங்கம் எப்பொழுதும் வெற்றிபெறப் போவதில்லை என்பதையும் புரிந்து கொண்டனர்.

மேலும் இதனை சிங்கள இளைஞர்கள் இராணுவத்திலிருந்து பெருமளவில் தப்பி ஓடுவதையும், புதிதாக இராணுவத்தில் சேர இளைஞர்கள் பின்னடிப்பதையும் கொண்டும் புரிந்து கொள்ளலாம். இராணுவத்திலுள்ள சிப்பாய்களும் வெற்றியில் நம்பிக்கை இழந்துள்ளனர். அத்தோடு, இராணுவத்தினரின் தேவை அதிகரித்துள்ளது. ஆனால், ஈடு செய்யக்கூடிய விதத்தில் அரசாங்கம் இல்லை இதனால், இராணுவ உயர்பீடமும் ஓரளவு மனமுடைவிற்கும் உள்ளாகியுள்ளது.

இந்நிலையிலும், அரசியல்வாதிகள் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு என்பதில் இருந்து விடுபடுவதாக இல்லை. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண எடுக்கும் முயற்சிக்கு தமது ஆட்சிக்கான இறுதிக்காலமாக ஆட்சியில் இருப்பவர்கள் கருதுகின்றார்கள். தாம் வளர்த்துவிட்ட இனவாதம் தம்மையே தாக்கி அழித்து விடும் என அஞ்சுகின்றார்கள்.

ஆனால், அரசியல் வாதிகளின் இந்நிலைப்பாடு ஒருபோதும் நன்மை அளிக்கப்போவதில்லை அதிகாரப்போட்டிக்காக அரசியல் தீர்வொன்றைப் பின் தள்ளிவரும் சிங்கள அரசியல்வாதிகள் இதே நிலையைத் தொடர்ந்தும் கடைப்பிடிப்பார்களேயானால் விரைவில் தமது எல்லையைச் சுருக்கிக் கொள்ள வேண்டியதோடு. தமது அதிகாரங்களையும் அவற்றிற்குள் மட்டுப்படுத்தவேண்டிய நிலை ஏற்படும் என்பதில் சந்தேகப்பட எதுவுமில்லை.

---

தாட்டும் பயங்கரப் பிசாசான எயிட்ஸ் நோய் பற்றிய பல்வேறுவிடயங்களையும் எடுத்து ஆராய்ந்தனர். எயிட்ஸ் என்பது இப்போதும் ஆய்வு கூடங்களிலும், கருத்தரங்க மண்டபங்களிலும் விவாதிக்கப்படும் ஒரு பிரச்சினையாக இல்லை. பதிலாக அது ஆரம்ப சுகாதார வசதிகளையோ அல்லது அடிப்படை உணவுத் தேவை, தங்குமிடம் குடிநீர் போன்றவற்றையோ பெற முடியாத நிலையில் இருக்கும் பல இலட்சக்கணக்கான மக்களின் உயிர்களோடு சம்பந்தப் பட்ட பிரச்சினையாகி விட்டது. இத்தகைய மக்களில் பெரும்பாலோர் வளர்ச்சி அடையாத அல்லது வளர்முக நாடுகளில் தான் இருக்கிறார்கள். இந் நோய்கள் தொடர்ந்து பரவும் தன்மை அந்த மக்களை மிரள வைப்பதோடு, நவீன மருத்துவ வசதிகள் இவர்களுக்கு பிரமிப்பை ஊட்டுபவையாக மட்டுமே இருக்கின்றன.

''இந்நோய்களின் பரவும் தன்மை வைரஸ்களோடு மட்டும் தொடர்புடையதல்ல. அது தனிநபர்களாகவும், சமூக படும் விழிப்படையத் தூண்டும் உண்மைகள் பற்றி குழப்பங்களுக்கு அப்பால் புரிந்து கொள்வதற்கு அது வழி வகுத்தது.

எண்பது சதவிகிதமான எயிட்ஸ் நோயாளர்கள் வளர்முக நாடுகளில் இருக்கின்றனர் என்பதுவே அதில் முதலாவது உண்மையாகும். பத்து வருடங்களுக்கு முன்பு அமெரிக்காவிலும், மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் வாழும் தன்னினச் சேர்க்கையாளர்கள், மற்றும் ஆண்களானபோதைப் பொருள் பாவனையாளர்களிடம் காணப்பட்ட இந்நோய் தற்போது உலகெங்கும் குறிப்பாக ஆசியாவிற்கு கடத்தப்பட்டுள்ளது. ஒரு தசாப்த காலத்திற்கு முன்பு ஆபிரிக்காவின் சகாராப் பகுதியில் பரவிய நோய்களை விட வேகமாக தெற்கு மற்றும் தென்னாசிய நாடுகளில் இந்நோய் பரவுவதாக உலக சுகாதார நிறுவனத்தின் எயிட்ஸ் பிரிவின் தலைவரான டாக்டர் மைக்கல் மேர்சன் அவதானித்து இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

எண்பதுகளின் நடுப்பகுதி

ஆராயப்பட்டுள்ளது. இம் மாநாடு பற்றி புரன்ட்லைன் சஞ்சிகை வெளியிட்ட கட்டுரையின் ஒரு பகுதி.

கின்றனர் என்பதும் கவனிக்கத்தக்கது)

ஆசிய அபிவிருத்தி வங்கி மேற்கொண்ட ஆய்வொன்றிலிருந்து இரண்டாயிரம் ஆண்டில் ஆசியாப் பகுதியில் 40 இலட்சம் பேர் எயிட்ஸ் நோயின் பாதிப்புக்கு இலக்காகியிருக்கக் கூடும் என்றும் 10 இலட்சம் மூத்த எயிட்ஸ் நோயாளிகள் இருக்கக் கூடும் என்றும் தெரிய வந்துள்ளது அத்துடன் சனத்தொகை வளர்ச்சி வீதமும் நோய்ப் பாதிப்புக்கு உள்ளான பெண்களின் தொகை அதிகரிப்பதன் காரணமாக ஒரு தேக்க நிலையை அல்லது வீழ்ச்சி நிலையை அடையக் கூடும்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கணிப்பிலிருந்து மேலும் குறைந்த வருமான முடை

பிரிவு பெருமளவில் இடம்பெர்தல், அதிகரித்து வரும் வியாபார ரீதியான போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறை என்பவை காரணமாகின்றன.

எயிட்ஸ் பரவுவதற்கு இவை காரணமாகிறது என்றால். பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கைப் போராட்டம் (வறுமைக்கும், நோய்க்கும் எதிராக) சிகிச்சைக்கான செலவினங்களைத் தாங்க முடியாமல் போகும் நிலையில், செல்வந்தர்களுக்கும்- ஏழைகளுக்குமான இடைவெளியை உலகரங்கில் வெளிச்சம் போட்டுக் காட்டுவதாக இருக்கின்றது' அறிக்கைகளிலிருந்து எயிட்ஸ் நோயாளி ஒருவருக்கு சிகிச்சை அளிப்பதற்கு அமெரிக்காவிலேயே வருடாந்தம் 38,000 டாலர்கள் தேவைப்படுகிறது. இந்தப் பெரிய தொகை என்பது இந்தியாவில் ஒரு சாதாரண விபச்சாரிக்கோ அல்லது நீண்டதூர லாரி டிரைவருக்கோ எப்போதும் ஒரு கனவாகவே இருக்க முடியும்.

உலகரீதியாக 'எயிட்ஸ், நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 3·5 கோடி டாலர்கள் நோய்ச் சிகிச்

சக்தியின் குறைவு என்பது இன்னுமொரு உறுத்தும் உண்மையாகும். ஏனெனில், நோயின் பாதிப்புக்கு இலக்காவோர் பெரும்பாலும் 20-40 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் ஆவர் என்பது ஐ. நா. அபிவிருத்திப் பிரிவின் கணிப்பு. சுகாதார நிகழ்ச்சித் திட்டங்களிலும் நகர்ப்புறங்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படுகின்ற போதும் கிராமங்களே இதனால் மோசமாகப் பாதிக்கப்படுபவையாகும்.

இதன் விளைவுகள் இத்துடன் மட்டும் நிற்கப் போவதில்லை. இவற்றின் விளைவுகளை மட்டிட்டு விட முடியாது. ஆனால் நோய் பற்றிய பயம், ஆழ்ந்த துக்கம், அநியாயம் மற்றும் ஒடுக்குமுறை, உலகளாவிய அளவில் பரவும் தன்மையால் ஏற்படும் நீண்டகால பின்விளைவு என்பவை கவனத்தில் கொள்ளப்படவில்லை என்று ஹார்வாட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் டானியல் டாரன் ரோலா கூறுகிறார்.

மொழியாக்கம்:

இளையவன்

---

# அபூமூஸா தீவு ஈரான் வசம் அரபு நாடுகளில் பதற்றம்

(மொஹா)

வளைகுடாவில் கேந்திரஸ்தானத்திலமைந்துள்ள அபூமூஸா தீவை ஈரான் வசப்படுத்திக் கொண்டிருப்பது வளைகுடா நாடுகளிடையே மனக்கசப்பை உண்டு பண்ணியுள்ளது.

வளைகுடா நாடுகளும் ஈரானும் மூஸாதீவின் கட்டுப்பாட்டைக் கூட்டாக வைத்திருந்தன தற்போது மூஸாதீவில் ஈரானின் கை ஓங்கியுள்ளது.

எண்ணெய் ஏற்றுமதி செய்யும் வளைகுடா நாடுகளிடையே ஒரு பதற்ற நிலை தலைதூக்கியுள்ளது.

வளைகுடா யுத்த முடிவோடு ஏற்பட்டுள்ள ஒரு உடன்படிக்கை அடிப்படையில் எகிப்தும் சிரியாவும் வளைகுடா நாடுகளுக்கு உதவ முன்வர வேண்டியது ஒரு நியதி.

யுத்த முஸ்தீபுகளுக்கு சாதாரண அமைச்சரவை மட்டத்திலெடுக்கப்படும் முடிவுகளுக்கு சிரியா உதவுமென சிரியா வெளிவிவகார அமைச்சர் பாறுக் அல்வுரா தெரிவித்தார்.

# இந்தியாவும், வியட்நாமும் உறவை அதிகரிக்க முடிவு

இந்தியாவும் வியட்நாமும் பொருளாதார உறவுகளை அதிகரிக்க உள்ளதாக இந்திய, வியட்நாமிய தலைவர்கள் முடிவு செய்துள்ளனர்.

அணுசக்தித்துறையிலும் எண்ணெய் வயல் அபிவிருத்தியிலும் இந்தியாவின் ஒத்துழைப்பை வியட்நாம் எதிர்பார்ப்பதாக வியட்நாமின் வெளியுறவு அமைச்சர் நிக்யோன் மான் காம் டில்லியில் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் தெரிவித்தார்.

அணுசக்தியை ஆக்கப் பணிகளுக்கு பயன்படுத்த வியட்நாம் விரும்புவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போது இந்தியா வந்திருக்கும் வியட் நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலர் தோமோய் இந்தியாவுடன் விஞ்ஞான மற்றும் தொழில் நுட்பத் துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதென விஞ்ஞான தொழில் நுட்ப இணையமைச்சர் ரங்கராஜன் குமார மங்கலத்துடனான சந்திப்பின்போது முடிவு செய்யப்பட்டது.

சாணவாயு, வேளாண்மை மற்றும் தொலைத் தகவல் தொடர்பு, தகவல் துறைஆகிய துறைகளில் இந்தியாவின் ஒத்துழைப்பைப்பெறுவதில் அவர் ஆர்வம்காட்டினார்.

தோமோய் இந்திய ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா உட்பட பலவேறு அரசியல் தலைவர்களையும் இந்திய தொழில் மற்றும் வர்த்தகப் பிரதிநிதிகளையும் சந்தித்து உரையாடினார்.

# கோவிலில் நெரிசல்; 8பேர் உயிரிழப்பு

பீகாரில் உள்ள கோவில் ஒன்றிற்குள் ஏற்பட்ட சன நெரிசலில் குறைந்தபட்சம் 8 பேர் உயிரிழந்ததுடன் 20 பேர் காயமடைந்தனர் என தெரியவருகிறது.

கோவிலினுள் மின் ஒழுக்கு ஏற்பட்டபோது பக்தர்கள் முண்டியடித்துக் கொண்டு வெளியேற முயன்றபோதே இச் சம்பவம் நிகழ்ந்தது.

# ஆறு நாடுகள் ஆதரவு

(டுபாய்)

ஈராக் தென்பகுதியில் நிலவும் விமானத்தடை உத்தரவுக்கு ஆறு வளைகுடா நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

வளைகுடா கூட்டுறவு சபை நாடுகள் பஹ்ரெயன், குவைத், ஓமான், கடார், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகளாகுமென்பது தெரிந்ததே.

# தமிழர்வாழ்வுரிமைமாநாடு; சென்னையில் பேரணி

தமிழர் வாழ்வுரிமை மாநாடு நேற்று முன்தினம் மூன்றாம் நாளாகச் சென்னையில் நடைபெற்றது.

இம் மாநாட்டையொட்டிப் பாட்டாளி மக்கள் கட்சி பேரணி ஒன்றை நடத்தியது. சைதாப் பேட்டையில் இருந்து ஆரம்பமாகிய இப்பேரணி சீரணி அரங்கத்தை சென்றடைந்தது.

பாட்டாளி மக்கள் கட்சியின் இளைஞர் மகளிர் அணித் தொண்டர்கள்ஆயிரக்கணக்கில் இப் பேரணியில் கலந்துகொண்டனர்.

# பாட்டாளி மக்கள் கட்சி மீது நடவடிக்கைஎடுக்கவேண்டும்

- வாழப்பாடி ராமமூர்த்தி

விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரித்துப் பேசும் பாட்டாளி மக்கள் கட்சியினர் மீது மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ் நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி சேலத்தில் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

மத்திய அரசும் மாநில அரசும் குற்றவாளி என்று கருதும் பிரபாகரனை ஆதரித்துப் பேசி வருவது கண்டிக்கத்தக்கது என்றும் அவர் கூறினார்.

சார்க் நாடுகளின்

# எதிர்க்கட்சி தலைவர்கள் கராச்சியில் சந்திப்பு

(கராச்சி)

தென்னாசியப் பிராந்திய நாடுகளின் எதிர்க்கட்சித் தலைவர்கள் கடந்த எட்டாம் திகதி கராச்சியில் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர். இப்பேச்சுக்களின் போது இந்தியாவின் வி.பி.சிங் பாகிஸ்தானின் பெனாசிர் பூட்டோ, பங்களாதேசின் ஷேக்ஹசீனவசீட், சிறிலங்காவின் அநுரா பண்டார நாயக்கா ஆகியோர் உட்பட சார்க் அமைப்பு நாடுகளின் எதிர்க்கட்சித் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

ஈழநாதம்

# உளப்பூர்வமான மக்கள் அஞ்சலி களம்நோக்கி நிமிரவைக்கிறது

**- அமுதன்**

(மன்னார்)

மாவீரர்களுக்கு மக்கள் அளித்த உளப்பூர்வமான அஞ்சலி எமை களம்நோக்கி மேலும் நிமிரவைக்கிறது என மன்னார் மாவட்ட அரசியல் நிர்வாக பொறுப்பாளர் திரு. அமுதன் தெரிவித்தார்.

கடந்த ஒன்பதாம் திகதி மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தின் மீதான வெற்றிகரத் தாக்குதலில் வீரச்சாவு அடைந்த 2-ம் லெப்டினன்ட் சூலாமணிக்கு நடாத்தப்பட்ட அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில் சிறிலங்கா இராணுவம் பூமி அதிர்ச்சி என்று கூறிக்கொண்டு எமது மண்ணில் கால்பதிக்கும் போதெல்லாம் எமது போராளிகள் வெடிகுண்டாக நின்று இராணுவத்தின் திட்டங்களை முறியடிக்கின்றனர். இராணுவத்தினரின் பாரிய இராணுவ நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் எமது போராளிகளின் வீராவேசத் தாக்குதல்களினால் சீர்குலைந்து போவதை காணக்கூடியதாக உள்ளது.

எமது மண் எப்பொழுதும் அதிர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. இராணுவத்தினரின் பூமியதிர்ச்சித் தாக்குதலினால் எல்லைகள் அதிர்ந்து தமிழீழம் அமைவதற்கான அறிகுறிகள் தான் என்று இதனை நாம் கருதவேண்டும். எதிரியின் திட்டங்கள் ஒவ்வொன்றும் தமக்குள்ளேயே சீர்குலைவையும் நிலையற்ற போக்கையும் உருவாக்கியுள்ளது.

பணலாற்றில் எமது போராளிகள் நடாத்திய துணிகரத் தாக்குதல் இராணுவத்தினரின் மேலாதிக்கத்தை மேலும் மேலும் நிலைகுலையச் செய்துள்ளது. பல மணி நேரம் பயணம் செய்து எதிரியின் எல்லைக்குள் புகுந்து நடத்திய தீரமிகு தாககுதலினால் 30 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. 20க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். இதனை இன்றைய சூழ்நிலையில் சிறிலங்கா அரசினதும் சிறிலங்கா பேரினவாதத்தினதும் குறுகிய சிந்தனைக்கு வீழ்ந்த உதையாகவே நாம் எண்ணி மகிழ்கிறோம் மாவீரனின் தாய் தந்தை இங்கு இல்லாத நிலையிலும் மாவீரன் 2 ஆம் லெப்டினன்ட் சூலாமணிக்கு மக்கள் அளித்த உளப்பூர்வமான அஞ்சலி, மலர் அஞ்சலி, ஆராதனைகளும் எமை களம் நோக்கி மேலும் நிமிரவைக்கின்றது உளப்பூர்வமாக எம்மிடம் நெருங்கி நில்லுங்கள் விரைவில் தமிழீழம் கிட்டும் என்றார்.

## மாவீரன் சூலாமணிக்கு மக்கள் இறுதி அஞ்சலி

கடந்த புதனன்று மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினர் மீதான வெற்றிகரமான தாக்குதலில் வீரச்சாவு அடைந்த மன்னார் மாவட்ட நானாட்டானைச் சேர்ந்த மாவீரன் 2 ஆம் லெப் சூலாமணி(பாலசுப்பிரமணியம் விக்கினேஸ்வரன்) இன் பூத உடல் மன்னார் மாவட்டத்தில் மடு, அடம்பன் பிரதேசங்களில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டது. பெருந்தொகையான மக்கள் மாவீரனுக்கு தமது கண்ணீர் அஞ்சலியை செலுத்தினர். வியாழனன்று மாலை 3.30 மணிக்கு மாவீரனின் பூத உடலைத் தாங்கிய வாகனம் வட்டக்கண்டல்,கருங்கண்டல், வண்ணான்குளம், ஆண்டான்குளம் ஆகிய கிராமங்களின் ஊடாக அடம்பன் பிரதேச செயலகத்தை வந்தடைந்தது. வீதிகள் தோறும் மக்கள் திரண்டு நின்று தமது இல்லங்களுக்கு முன்னால் மலர் வளையம் வைத்து தீப ஆராதனையும் மலர் அஞ்சலிகளையும் மிகவும் ஒழுங்காக நடத்தினர் காலை 10 00 மணிக்கு மடுவிலும் மாலை 4 30 மணிக்கு அடம்பன் பிரதேசச் செயலகத்திலும் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது இக் கூட்டத்தில் மடுப் பிரதேச அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு நந்தகுமார்,பிரதேச அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு இளையவன் மகளிர் முன்னணியைச் சேர்ந்த உறுப்பினர்களும் மற்றும் பொதுமக்களும் மாவீரனுக்கு அஞ்சலி உரைகளும், இரங்கல் கவிதைகளும் வழங்கினர் 5.00 மணியளவில் காக்காச்சிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் போராளிகளின் இராணுவ மரியாதை வேட்டுக்களுடன் மாவீரன்2ஆம் லெப்.சூலாமணியின் பூத உடல் புதை குழியில் விதைக்கப்பட்டது.

## மிதிவெடியில் சிக்கி பாதத்தை இழந்தார்

யாழ் கோட்டைப்பகுதியில் விறகு எடுக்கச் சென்ற குடும்பப் பெண்மணி ஒருவர் மிதிவெடியில் சிக்கி தனது இடது காலை பாதத்துடன் இழந்த சம்பவம் ஒன்று நேற்று நடைபெற்றது

கொட்டடிப் பகுதியைச் சேர்ந்த இராஜேஸ்வரி (வயது 39)என்டவரே இவ்வாறு தனது காலை இழந்தவராவார். (ச)

கண்ணிவெடி

விளக்கினார் ''மிகவும் கஷ்ரமானதும், மிகவும் சாதுரியமானதும், மிகவும் ஆபத்து நிறைந்ததுமான இந்தப் பணியில் ஈடுபடும் போராளிகள் தரும் தகவல்களைக் கொண்டே தாக்குதல் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. இந்தத் தாக்குதல்கள் வெற்றி பெறுவதற்கும் வேவுப் பிரிவினரின் துணிகர முயற்சிகளும் அவர்கள் பெறும் தகவல்களுமே காரணமாக உள்ளது. இந்த ஆபத்தான பணியில் இறங்கிய பல அற்புதமான போராளிகளையும் நாம் பறிகொடுத்துள்ளோம்.'' என்று தலைவர் எடுத்துரைத்தார்.

எமது போராளிகளின் துணிச்சலையும், வீரசாகசச் செயலையும் பாராட்டிக் கௌரவிப்பதற்காகவே சமீப காலமாக இந்தப் பரிசில்கள் வழங்கும் புதிய மரபு அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதாக எடுத்து விளக்கிய தலைவர், இது எமது இளம் போராளிகளுக்கு ஊககத்தையும் உற்சாகத்தையும் அளிக்குமெனக் குறிப்பிட்டார். வேவுப்பணி மட்டுமன்றி களத்திலும் மற்றும் படைத்துறை சார்ந்த சகல கைங்கரியங்களிலும் அபார திறமையும், துணிச்சலையும் வெளிபடுத்தும் செயல்களுக்கும் போராளிகளுக்கு கௌரவப் பரிசு வழங்கப்படுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

தலைவரின் உரையை அடுத்து போராளிகளுக்கு பரிசில்கள வழங்கப்பட்டன.

லங்கா

வால் அதிகரித்துக் காணப்படுகிறதென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கணக்கறிக்கையில் மேலும்,

இந் நிறுவனத்தின் துறைமுகம், உற்பத்தி இயந்திரங்களின் தொழிற்படுகின்ற சாத்தியப் பாடுகள், தொழிற்சாலையின் நிலை என்பன சக்திகளு அப்பாற்பட்ட காரணிகளால் அறிந்து கொள்ள முடியாமல் இருப்பதன் காரணமாக உண்மை நிலை பற்றிய பெறுபேறுகளை சமர்ப்பிக்க முடியாதுள்ளது.

அத்துடன் ஒப்பந்தத்தில்

# வட்டப் பிரிவு ரீதியாக திலீபன் நினைவு நிகழ்வுகள்

(நமது நிருபர்)

தியாகி லெப். கேணல் திலீபனின் 5 ஆம்ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் தமிழீழம் எங்கும் உணர்ச்சிபூர்வமாக நடைபெறவுள்ளது.

தமிழீழத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் உள்ள வட்ட ரீதியாக பதினொரு நாட்களும் உண்ணாவிரதங்களும் திலீபனின் உரைகள், கவிதைகள், வில்லிசை ஆகியன இடம்பெறுவதுடன் திலீபனின் உண்ணாவிரத நிகழ்வின் ஒளிப்படமும் காண்பிக்கப்படவுள்ளதாக மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

### யாழ் மாவட்டத்தில் திலீபன் நிகழ்வுகள்:-

யாழ் மாவட்டத்தில் திலீபனின் 5 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சிகள் அனைத்தும் தமிழீழ மக்களின் எழுச்சி பூர்வமான பங்களிப்புடன் அனைத்து வட்டப் பிரதேசங்களிலும் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு இளம் பரிதி தெரிவித்தார்.

திலீபனின 5 ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகள் பற்றி அவர் விளக்கம் அளிக்கையில் இம்முறை இந் நிகழ்வுகள் அனைத்தும் வலிகாமம், வடமராட சி, தென்மராடசிகோட்டங்களில நாளை முதல் 25ஆம் திகதிவரையான பதினொரு நாட்களும்நடைபெறவுள்ளன.

### சுழற்சி முறை உண்ணா விரதம்:-

நாளாநதம் காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை சுழறசிமுறையிலான உண்ணா விரதம் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வுகளை வலிகாமத்துடன் தீவகமும் இணைந்து நடாத்தவுள்ளது இவை வலிகாமத்தில் ஆறு இடங்களிலும் வடமராட்சியில் 2 இடங்களிலும் தென்மராட்சியில 4 இடங்களிலும் பதினொரு நாட்களும நடைபெறவுள்ளன.

### வலிகாமத்தில்:-

தீவகம், நல்லூர் வட்ட நிகழ்வுகள் நல்லூர் கந்தசாமி கோவிலடியிலும் உடுவில் வட்ட நிகழ்வுகள சுன்னாகம் சிவன் கோவிலடியிலும் கோப்பாய் வட்ட நிகழ்வு நீர்வேலி கந்தசுவாமி கோவிலடியிலும் சங்கானை வட்ட நிகழ்வு வடக்கம்பரை அம்மன் கோவிலடியிலும சுதுமலை அம்மன் கோவிலடியில் சண்டிலிபபாய் வட்டத்தினதும் வண்ணார்

வில் 190 ஆம் கட்டை அருகில் சாவகச்சேரி வட்ட நிகழ்வுகளும் கைதடிச் சந்தியருகில் கைதடி வட்ட நிகழ்வுகளும் வெகு எழுச்சி பூர்வமாக நடைபெறவுள்ளன.

இந் நாளாந்த நிகழ்வுகளில் தினமும் அந்தந்த வட்டத்திற்குட்பட்ட வெவ்வேறு கிராம மக்களும் அவ்வப்பகுதி சனசமூக நிலையங்கள், சங்கங்கள், பொதுஸ்தாபனங்கள், பாடசாலைகள் ஆகியன கலந்து கொள்ளவுள்ளன.

### திலீபனின் உருவப்படம்:-

யாழ். மாவட்டத்தின் அனைத்துப்பகுதிகளிலும் உள்ளபிரதானசந்திகள், பாடசாலைகள், பொதுஸ்தாபனங்களில், மற்றும் வீட்டு வாயில்களில் தினமும் தியாகி திலீபனின் உருவப்படத்தை வைத்து அலங்கரித்து மலர்கள் தூவி மக்கள் விளக்கேற்றவுள்ளனர்.

இறுதி நாளான எதிர்வரும் 26 ஆம் திகதி தியாகி திலீபன் 5 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் மிகப் பெரிய அளவில் மூன்று இடங்களில் நடைபெறவுள்ளன- இவை வலிகாமக் கோட்டப் பிரிவிற்கு நல்லூர் கந்தசுவாமி கோவிலடியிலும் வடமராட்சி கோட்டத்திற்கான நிகழ்வு மாலிசந்தியிலும் தென்மராட்சி கோட்டப் பிரிவு நிகழ்வுகள் மீசாலை மாவடி பிள்ளையார் ஆலய முன்பாகவும் நடைபெறவுள்ளன-

அன்றைய தினம் உண்ணாவிரத நிகழ்வும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன- (ச)

## இருலொறிகளுக்குஇடையில் நசியுண்டு ஒருவர் மரணம்

(யாழ்ப்பணம்)

நேற்று பி ப 3-00 மணியளவில் மனோகரா திரையரங்கிற்கு அருகாமையில் ஒரு லொறியை இன்னுமொரு லொறியால் தள்ளி ஸ்ராட் பண்ணுவதற்காக இரண்டு லொறிகளுக்கும் இடையில் கட்டையை வைத்துப் பிடித்த லொறி கிளீனர் கட்டை சறுக்கியதால் இரண்டு லொறிகளிற்கும் இடையில் நசியுண்டு மரணமானார்.

புங்குடுதீவு 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் கிருஷ்ணமூர்த்தி (வயது 22) என்னும இவர் தற்பொழுது இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் வசிதது வருகின்றார். (88)

## ஆயிரம் இல தமிழ் அகதிகள் கப்பலில் அனுப்பப்பட்டனர்

ஆயிரத்துக்கும் சற்று அதிகமான இலங்கைத் தமிழ் அகதிகள் நேறறுக் கப்பல் மூலம் திருக்கோணமலைக்கு அனுப்பபட்டார்கள்.

தமிழக அரசின் முதன்மை ஆணையாளர் சி என் ராமதாஸ் நேற்று சென்னையில் இத்தகவலை வெளியிட்டார்.

இவர்களோடு சேர்த்து 25 000 ற்கும் அதிகமானோர் கப்பல் மற்றும் விமானமூலம் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இப்போது கப்பல் வசதி கிடைத்துள்ளதால் அகதிகளை விமானம் மூலம் அனுப்புவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

## சிங்கள மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர்

வடபகுதிக்கு பல பொருள்கள் தடை செய்யப்பட்டுள்ள போதும் இராணுவ உயரதிகாரிகளும், அரசியல் வாதிகளும் பெருமளவில் லஞ்சம் பெற்றுக்கொண்டு அவற்றை அனுப்பி வருவதால் சிங்கள மக்கள் அவர்கள் மீது நம்பிக்கை இழந்து விட்டனர் என பி. பி ஸி தெரிவித்தது

இவர்களின் இந் நடத்தை யுத்தம் பற்றி சிங்கள பொது மக்களிடையே ஒரு அலட்சியப் போக்கை வளர்த்துள்ளது எனவும், நீண்டகாலம் நீடிக்கப்போகும் இந்த யுத்தத்தில் சிக்கி வீணாக ஏன் உயிரிழக்க வேண்டும் என சிந்திக்க வைத்துள்ளதாகவும் பி பி ஸி தெரிவித்தது.

கடந்த மே மாதம் வரை

வாங்கிவிட்டீர்களா?
முந்துங்கள்!

மாவட்டத்தில் மீடு, அடம்பன் பிரதேசங்களில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டது. பெருந்தொகையான மக்கள் மாவீரனுக்கு தமது கண்ணீர் அஞ்சலியை செலுத்தினர். வியாழனன்று மாலை 3.30 மணிக்கு மாவீரனின் பூத உடலைத் தாங்கிய வாகனம் வட்டக்கண்டல், கருங்கண்டல், வண்ணான்குளம், ஆண்டான்குளம் ஆகிய கிராமங்களின் ஊடாக அடம்பன் பிரதேச செயலகத்தை வந்தடைந்தது. வீதிகள் தோறும் மக்கள் திரண்டு நின்று தமது இல்லங்களுக்கு முன்னால் மலர் வளை

நந்தகுமார், பிரதேச அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு இளையவன் மகளிர் முன்னணியைச் சேர்ந்த உறுப்பினர்களும் மற்றும் பொதுமக்களும் மாவீரனுக்கு அஞ்சலி உரைகளும், இரங்கல் கவிதைகளும் வழங்கினர் 5.00 மணியளவில் காக்காச்சிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் போராளிகளின் இராணுவ மரியாதை வேட்டுக்களுடன் மாவீரன் 2 ஆம் லெப்.சூலாமணியின் பூத உடல் புதை குழியில் விதைக்கப்பட்டது.

தும் குறுகிய சிந்தனைக்கு வீழ்ந்த உதையாகவே நாம் எண்ணி மகிழ்கிறோம் மாவீரனின் தாய் தந்தை இங்கு இல்லாத நிலையிலும் மாவீரன் 2 ஆம் லெப்டினன்ட் சூலாமணிக்கு மக்கள் அளித்த உளப்பூர்வமான அஞ்சலி, மலர் அஞ்சலி, ஆராதனைகளும் எமை களம் நோக்கி மேலும் நிமிரவைக்கின்றது உளப்பூர்வமாக எம்மிடம் நெருங்கி நில்லுங்கள் விரைவில் தமிழீழம் கிட்டும் என்றார்.


# வாங்கிவிட்டீர்களா? முந்துங்கள்!



இதோ நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த

திரு. மு. திருநாவுக்கரசு அவர்கள்

எழுதிய

**புதிய சர்வதேச ஒழுங்கின்கீழ் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை**

பிரதி ஒன்றின் விலை ரூபா 20-00

**அரச பயங்கரவாதமும் ஆயுதபுரட்சியும்**




இத்துடன் எமது அடுத்த தொகுதி புத்தங்களும் வெளிவந்துவிட்டன.

குறைந்த விலை! நிறைந்த சேவை!

கவிதை, நாவல், இலக்கியம், அரசியல்
அனைத்து நூல்களும் பெற அரிய இடம்
பாடசாலை உபகரணங்களுக்கும்
பாடசாலை நூல்களுக்கும்
சிறந்த ஒரே இடம்

## "தமிழ்த்தாய் புத்தகசாலை"

191, மின்சாரநிலைய வீதி,
(பஸ்நிலைய அருகாமை)
யாழ்ப்பாணம்.

(சி 5045)


கௌரவப் பரிசு வழங்கப்படுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

தலைவரின் உரையை அடுத்து போராளிகளுக்கு பரிசில்கள வழங்கப்பட்டன.

---

## லங்கா

வால் அதிகரித்துக் காணப்படுகிறதென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கணக்கறிக்கையில் மேலும்,

இந் நிறுவனத்தின் துறைமுகம், உற்பத்தி இயந்திரங்களின் தொழிற்படுகின்ற சாத்தியப் பாடுகள், தொழிற்சாலையின் நிலை என்பன சக்திகுது அப்பாற் பட்ட காரணிகளால் அறிந்து கொள்ள முடியாமல் இருப்பதன் காரணமாக உண்மை நிலை பற்றிய பெறுபேறுகளை சமர்ப்பிக்க முடியாதுள்ளது.

அத்துடன் ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி நிறுவனத்தின் நலனில் அக்கறை எடுக்க அதன் பணிப்பாளர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும தவறியுள்ளனர் என தெரிவிக்கப் படுகின்றது.

இந் நிறுவனத்தில் சுமார் 1000 தொழிலாளர்கள் பணி புரிவது குறிப்பிடத்தக்கது.

---

## இலங்கை

தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

உப-தலைவர் பதவிக்கு மு. ஒப்பிலாமணி, க. புவனேந்திரன், து. ஜெயரட்ணம் ஆகியோர் போட்டியிட்டனர். ஒப்பிலாமணி போட்டியிலிருந்து விலகிக் கொண்டார். க. புவனேந்திரன் 275 அதிகப்படியான வாக்குகளைப் பெற்று உப தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

செயலாளர் பதவிக்கு வி. த. கணேசலிங்கம் தெரிவு செய்யப்பட்டார். எதிர்த்துப் போட்டியிட்ட விக்னேஸ்வரனைவிட கணேசலிங்கம் 314 அதிகப்படியான வாக்குகளைப் பெற்றார்.

பொருளாளர் பதவிக்கு கோ. தியாகராசா தெரிவு செய்யப்பட்டார். எதிர்த்துப் போட்டியிட்ட இ. தர்மலிங்கத்தைவிட இவர் 300 அதிகப்படியான வாக்குகளைப் பெற்றுத் தெரிவுசெய்யப்பட்டார்.

நிர்வாகசபை உறுப்பினர் பதவிக்கு 16 பேர் போட்டியிட்டனர். இவர்களில் இரட்ணசபாபதி குருபரன் 198 வாக்குகள் பெற்று முதலாவதாகவும் தொடர்ந்து நா. கணபதிப்பிள்ளை 184 வாக்குகள் பெற்றும் செ. செல்வரஞ்சன் 146 வாக்குகள் பெற்றும் சி. வேலாயுதம் 130 வாக்குகள் பெற்றும் அ கரிசிலாமஸ் 177 வாக்குகள் பெற்றும் தெரிவு செய்யப்பட்டனர்.

இரகசிய வாக்கெடுப்பின் மூலம் இத் தெரிவுகள் நடைபெற்றன. [பா],[35],[14]

நாளாநதம் காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை சுழற்சிமுறையிலான உண்ணாவிரதம் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வுகளை வலிகாமத்துடன் தீவகமும் இணைந்து நடாத்தவுள்ளது இவை வலிகாமத்தில் ஆறு இடங்களிலும் வடமராட்சியில் 2 இடங்களிலும் தென்மராட்சியில 4 இடங்களிலும் பதினொரு நாட்களும நடைபெறவுள்ளன.

### வலிகாமத்தில்:-

தீவகம், நல்லூர் வட்ட நிகழ்வுகள் நல்லூர் கந்தசாமி கோவிலடியிலும் உடுவில் வட்ட நிகழ்வுகள் சுன்னாகம் சிவன் கோவிலடியிலும் கோப்பாய் வட்ட நிகழ்வு நீர்வேலி கந்தசுவாமி கோவிலடியிலும் சங்கானை வட்ட நிகழ்வு வடக்கம்பரை அம்மன் கோவிலடியிலும சுதுமலை அம்மன் கோவிலடியில் சண்டிலிப்பாய் வட்டத்தினதும் வண்ணார் பண்ணை ஐயனார் கோவிலடியில யாழ்ப்பாண வட்டத்தினது நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன

### வடமராட்சியில்:-

வடமராட்சி கோட்டத்திற்கான திலீபனின் நிகழ்வுகள் பருத்தித்துறையில் அல்வாய் முத்துமாரி அம்மன் கோவிலடியிலும் கரவெட்டி மூத்த விநாயகர் கோவிலடியிலும் நிகழவுள்ளன

### தென்மராட்சிக் கோட்டம்:

தென்மராட்சிக் கோட்டத்திற்குட்பட்ட வட்டப் பிரதேசங்களில் பெரிய பளை தினேஸ் முகாம்முன்பாக பளை வட்ட நிகழ்வுகளும் புகையிரத நிலையம் அருகில் கொடிகாமம் வட்ட நிகழ்வுகளும் நுணா

---

## பரிசு பெற்ற

பொறுப்பாளர்: கண்ணன்

புல்லாவெளியில் இராணுவத்தினரின் சீன டாங்கி ஒன்றை ஆர்.பி.ஜி தாக்குதல் மூலம் முற்றாக நாசஞ் செய்தவர்: இளந்திரையன் (டார்வின்)

---

## தமிழ்

கிய காலகட்டத்திற்கு யாழ்ப்பாணக் குடா நாட்டில் தங்களது உறுப்பினர்கள் சிலரையாவது தங்கவைப்பதே புளொட் குழுவின் நோக்கம் எனவும் தெரியவருகின்றது

வடக்கில் இன்னொரு இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படும்போது புளொட் உறுப்பினர்கள் இதில் பங்குபற்றவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## இனப்பிரச்சினை

லுள்ள தமிழ்க் குழுக்களுடன் சில இராணுவத் தளபதிகள் தொடர்ந்தும் தொடர்பு கொண்டு வருவதாகவும் அப் பத்திரிகை மேலும் தெரிவிக்கின்றது.

ஆயிரக்கணக்கில் சற்று அதிகமான இலங்கைத் தமிழ் அகதிகள் நேற்றுக் கப்பல் மூலம் திருக்கோணமலைக்கு அனுப்பப்பட்டார்கள்.

தமிழக அரசின் முதன்மை ஆணையாளர் சி என் ராமதாஸ் நேற்று சென்னையில் இத்தகவலை வெளியிட்டார்.

இவர்களோடு சேர்த்து 25 000 ற்கும் அதிகமானோர் கப்பல் மற்றும் விமானம் மூலம் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இப்போது கப்பல் வசதி கிடைத்துள்ளதால் அகதிகளை விமானம் மூலம் அனுப்புவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

# சிங்கள மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர்

வடபகுதிக்கு பல பொருள்கள் தடை செய்யப்பட்டுள்ள போதும் இராணுவ உயரதிகாரிகளும், அரசியல்வாதிகளும் பெருமளவில் லஞ்சம் பெற்றுக்கொண்டு அவற்றை அனுப்பி வருவதால் சிங்கள மக்கள் அவர்கள் மீது நம்பிக்கை இழந்து விட்டனர் என பி. பி ஸி தெரிவித்தது.

இவர்களின் இந் நடத்தை யுத்தம் பற்றி சிங்கள பொது மக்களிடையே ஒரு அலட்சியப் போக்கை வளர்த்துள்ளது எனவும், நீண்டகாலம் நீடிக்கப்போகும் இந்த யுத்தத்தில் சிக்கி வீணாக ஏன் உயிரிழக்க வேண்டும் என சிந்திக்க வைத்துள்ளதாகவும் பி பி ஸி தெரிவித்தது.

கடந்த மே மாதம் வரை

# 3699 படையினர் பலி 6526 பேர் படுகாயம்

கடந்த மேமாதம் வரையான காலத்தில் 3699 படையினர் பலியாகியுள்ளதாகவும் 6526 படையினர் காயமடைந்துள்ளதாகவும் 324 படையினர் காணமல் போயுள்ளதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது

பலியாகியோரில் 92 பேர் உயரதிகாரிகள் எனவும் 2708 பேர் இராணுவத்தினர் எனவும் 88 பேர் கடற்படையினர் எனவும் 59 பேர் விமானப்படையினர் எனவும் 844 பேர் பொலிசார் எனவும் தெரிவிக்கப்படுகிறது இவர்களை விட 115 ஊர்காவல் படையினர் பலியாகியுள்ளனர்.

அத்துடன் 290 உயரதிகாரிகள் உட்பட 6526 படையினர் காயமடைந்தும் 14 அதிகாரிகள் உட்பட 324 பேர் காணாமல் போயும் உள்ளனர் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

---

## மீனவர்கள்

கேஸ்வரன் (வயது 26) ஆகியோர் கடலுக்குச் சென்றதாகவும் அவர்களுக்கு நேராக வந்த கடற்படையினர் இவர்கள் மீது பிரங்கித் தாக்குதலை மேற்கொண்டதாகவும் களிங்கேஸ்வரன் என்பவரைக் கைது செய்து பலமாக தாக்கி விட்டு விடுவித்ததாகவும், மற்றைய இருவரும் கடலில் குதித்து கரை சேர்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் எடுத்துச் சென்ற மீன்பிடிவள்ளமும் கடற்படையினரால் சேதமாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (82)

---

# உள் வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 13-09-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 5605

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்: 26-5206, 26-4792, 26-6745, 27-922, 24-9490, 40-2677, 26 4691, 26 7663.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:- 41 9038 26-4460, 40-2394, 26-1098, 24-4707, 24-1983, 24-6699.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.